கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 20 ஞாயிற்றுக்கிழமை (05 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 09

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா இம்மாத இறுதியில் பதவி விலகுகின்றார்!

லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா கடந்த இரண்டு வருடங்களாக இராணுவத் தளபதியாகப் பணிபுரிகிறார். அவருக்குஇப்போது 55 வயது. எதிர் வரும் மே மாதத்தில் அவரது பதவிக் காலம் முடிவடைகிறது.

எனினும் பூநகரியில் ஏற்பட்ட பெருந்தோல்விக்குப் பொறுப்பேற்று அவர் பதவி விலகவிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த பத்து வருடங்களாக நடைபெற்று வரும் மோதலில் பூநகரித் தோல்வி மிக மிக மோசமானது; சகித்துக் கொள்ள முடியாதது என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதனாலேயே அவர் பதவி விலகுவது நிச்சயமாகிவிட்டது.— என்று அவதானிகள் தெரிவித்தனர்.

இராணுவத் தளபதியின் பதவி விலகல் குறித்து பி.பி.ஸி. தெரிவித்ததாவது:-

இளைப்பாறுவதின் சிசிலுக்கு ஆலோசகப் பதவி ஒன்று வழங்கப்படலாம் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பதவியில் இருந்து ஒரு வரை விரட்டுவதில் இதை இலங்கைப் பாணி எனக் கருதலாம்.

1980 களின் இறுதிப் பகுதியில் தலைதூக்கிய ஜே.வி.பி. கிளச்சியை ஈவு இரக்கமற்ற முறையில் நசுக்கி அழித்தவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் ஹெலி நோட்டம்

வல்வெட்டித்துறை, டிச. 5

ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று மாலை 4 மணி அளவில் தொண்டமானாறு, உடுப்பிட்டி, வல்லை போன்ற பகுதிகளில் தாழப் பறந்து நோட்டமிட்டுச் சென்றது.

(க-155)

புயல் காரைக்காலை கடந்து சென்றது!

தமிழ் நாட்டில் 20 பேர் மரணம்

சென்னை, டிச. 5

வங்கக்கடலில் இரண்டு நாட்களாக நிலை கொண்டிருந்த புயல் நேற்றுக் காலை சென்னைக்கு அருகே காரைக்கால் கடற்கரைக்கு அப்பால் கரை கடந்ததாக அறிவிக்கப்பட்டது.

புயல் கரையைக் கடந்த வேளை பலத்த மழை பெய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக தமிழ் நாட்டின் தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், காயிதேமில்லத், புதுக்கோட்டை, பாண்டிச்சேரி, இராமநாதபுரம் கரையோரப் பகுதிகளில் அடுத்த 12 மணி நேரத்தில் மணிக்கு 120 முதல் 140 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடும் என சென்னை புயல் மையம் நேற்று மாலை அறிவித்தது.

இதேவேளை —

புயல் மற்றும் கடும் மழை காரணமாக தமிழ் நாட்டில் இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளனர். (இ-5)

பருத்தித்துறையில் இறங்குதுறை சேதம்

வாதுவ திரும்பிச் சென்றது

வடமராட்சி, டிச. 5

நேற்று வீசிய கடும் காற்றினால் பருத்தித்துறை இறங்குதுறையும், அங்கு கட்டப்பட்டிருந்த நான்கு இழுவைப் படகுகளில் (பாஜ்) மூன்றும் சேதம் அடைந்தன.

காங்கேசன்துறையில் இருந்து வந்த வாதுவ கப்பலும் பொருள்களை இறக்கா மல் திரும்பிச் சென்றது.

யாழ். புனர்வாழ்வு, புனரமைப்பு பிரதிப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் நேற்று பிற்பகல் பருத்தித்துறை துறைமுகத்துக்குச் சென்று சேதவிவரங்களை நேரில் பார்வையிட்டார்.

சேதமடைந்த இறங்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

பூநகரித் தோல்வியின் எதிரொலி; தூதுவர் பதவி வழங்கப்படலாம்

கொழும்பு, டிசம்பர் 5

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தளபதி லெப், ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா தமது பதவியில் இருந்து விலகவிருக்கிறார்.

அவர் பதவி நீங்குவது நிச்சயம். எப்போது விலகுவார் என்பது தான் இப்போதைய கேள்வி.

அனேகமாக இம் மாதத்தில் அவர் தமது பதவியிலிருந்து நீங்குவார் என்றும் —

வழமைப் பிரகாரம் வெளிநாட்டுத் தூதுவர் பதவி ஒன்று வழங்கப்படும் என்றும் — கூறப்படுகிறது.

பூநகரியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஏற்பட்ட பெரும் தோல்விக்குப் பொறுப்பேற்றே சிசில் தமது பதவியில் இருந்து விலகுவதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

பூநகரித் தோல்வியால், இழப்பால் ஆத்திரம் அடைந்துள்ள சிங்கள மக்களை சாந்தப்படுத்துவதற்கு சிசிலின் பதவி விலகல் அவசியமானது என்பது எப்போதோ முடிந்த விடயம் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கடலில் மிதந்து வந்த பொருள் குழந்தையின் கையை துண்டாடியது

கொழும்புத்துறையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 5

கடலில் மிதந்து வந்த பொருளை எடுத்து விளையாடிய குழந்தை ஒன்று, அப்பொருள் வெடித்ததினால் கையை இழந்தது.

இச்சம்பவம் நேற்றுக் காலை கொழும்புத்துறையில் இடம்பெற்றது.

பாஷையூரில் இருந்து இடம்பெயர்ந்து வந்து கொழும்புத்துறையில் வசித்து வந்த குடும்பம் ஒன்றைச் சேர்ந்த பற்றிக் ஜொனிற்றன் என்ற இரண்டு வயதுக் குழந்தையே கையை இழந்த குழந்தை ஆகும்.

இக் குழந்தையின் வலது கை முழங்கைக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது.

இவரின் சகோதரியான ஒன்பது மாதம் நிரம்பிய பற்றிக் ஜொனிற்றா என்ற மற்றும் ஒரு குழந்தை இடது கையில் காயம் அடைந்துள்ளது.

இவர்கள் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக கடல்நீர் வீடுவரை வந்திருந்ததாகவும் அந்த நீரில் மிதந்து வந்த சுடுதண்ணீர் போத்தல் மூடி போன்ற பொருளையே குழந்தை எடுத்து விளையாடியது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-17-15)

நாடாளுமன்றத்தில் பொய்த் தகவல்கள்

சமீப நாட்களாக அதிகரிப்பு

கொழும்பு, டிச. 5

என்றும் இல்லாதவகையில் ஜனாதிபதியும் அவரது சில அமைச்சர்களும் நாடாளுமன்றத்தில் உண்மைக்குப் புறம்பான — பொய்யான தகவல்களை வெளியிட்டு வருவது சமீபகாலமாக அதிகரித்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களால் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எயர் லங்கா நிறுவனத்திற்கு ஐந்து எயர் பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்யும் விடயத்தில் தவறான தகவல்கள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருப்பதாக சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பிரதமராக இருந்த சமயம் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் நட்டத்தில் இயங்குவதாக நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். — அப்படியான நிலை இன்றும் தொடர்ந்து வருகிறதா? அதுபற்றி பின்னர் எதுவும் தெரிவிக்கப்படவில்லையே என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் குளியாப்பிட்டியில் உள்ள சினிமா தியேட்டர் ஒன்றில் வைத்துக் கைது செய்யப்பட்ட காதல் ஜோடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

சபாநாயகரின் யாழ்ப்பாண விஜயம் புத்தாண்டுக்கு முன்

பூநகரிச் சம்பவமே தாமதப்படுத்தியதாம்

கொழும்பு, டிச. 5

புத்தாண்டுக்கு முதல் தாம் யாழ்ப்பாணம் சென்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனைச் சந்திக்க இருப்பதாகவும், பூநகரி சம்பவமே தமது யாழ்ப்பாண விஜயத்தை தாமதப்படுத்தியது என்றும் சபாநாயகர் எம். எச். முகம்மது பத்திரிகையாளரான எல்மோ பெர்னாண்டோவுக்குத் தெரிவித்துள்ளார்.

எல்மோ பெர்னாண்டோவின் பேட்டி நேற்று பி.பி.ஸி. சிங்களச் சேவையில் வெளிவந்திருந்தது.

இலங்கையில் இருந்து வரும் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வொன்றை விட வேறு எந்தவித தீர்வும் எனக்குத் தென்படவில்லை.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன், மாவீரர் வாரம் தொடர்பாக ''புலிகளின் குரல்'' வானொலியில் வெளியிட்ட அறிக்கையில், பேச்சுவார்த்தைக்கான கதவு இன்றும் திறந்திருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

எனவே இனப் பிரச்சினையை சமாதானமாகத் தீர்க்க வேண்டும் என்ற நம்பிக்கை எனக்கும் திரு. பிரபாகரனுக்கும், இலங்கையில் உள்ள அனைவருக்கும் உண்டு என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

நல்ல மனதுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

எனது உத்தேச யாழ்ப்பாண விஜயம் திரு. பிரபாகரனுக்கு எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது. எனவே திரு. பிரபாகரன் என்னைச் சந்திக்கச் சம்மதிப்பார் என்றே நம்புகிறேன்.

மேற்கண்டவாறு சபாநாயகர் தெரிவித்ததாக பத்திரிகையாளரான எல்மோ பெர்னாண்டோ பி. பி. ஸி. சிங்களச் சேவையில் தெரிவித்துள்ளார். (இ-6)

முச்சந்தி முரவி

பூநகரித் தாக்குதல் நடந்த மறுநாளே போயிருக்க வேண்டியவர் பாருங்கோ.....!

வன்னி பகுதியில் பலத்த மழை வீடுகள் அழிவு; குளம் உடைப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

வன்னி பெருநிலப் பரப்பில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையால் நூற்றுக் கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்துள்ளனர். நூற்றுக் கணக்கான ஏக்கர் பயிர் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

முறிகண்டிப் பகுதியில் சுமார் 50 வீடுகளும், செல்வபுரத்தில் 15 வீடுகளும், மாதிரிபுரம், கிருஷ்ணபுரம், மலையாள்புரம், விவேகானந்தநகர் ஆகிய இடங்களில் 50க்கு மேற்பட்ட வீடுகளும் வெள்ளத்தால் அழிந்து போயிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

முறிகண்டிக் குளம் உடைப்பெடுத்துள்ளதாலும், அக்கரையான் குளத்தில் நீர் மேவிப் பாய்வதாலுமே மேற்சொன்ன இடங்களில் வெள்ள அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

சுமார் 200க்கு மேற்பட்ட ஏக்கர் நிலப் பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெல், கௌபி, உழுந்து மற்றும் கடலைப் பயிர் நாசமாகியுள்ளன.

வில்வமடு குளத்தில் நீர் மேவிப் பாய்வதால் பிரமேசன் ஆறு, மயில்வாகன புரம், நாகையன் குடியேற்றத் திட்டம் ஆகிய பகுதிகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ராணுவ அணுகுமுறை மூலம் தமிழர் பிரச்சினை தீராது

ஹமில்டனிடம் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிச 5

தமிழர் தேசிய பிரச்சினையை இராணுவ அணுகுமுறை மூலம் தீர்த்துவிட முடியாது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிடம் இவ்வாறு கூறினார்.

பொருள்கள் மீதான தடையை நீக்கி வடபகுதிக்கு மின்சாரத்தை வழங்கி ஒரு சுமுகமான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.

யாழ். அரச செயலகம் மற்றும் 132 வருடங்கள் பழமை வாய்ந்த தேவாலயம், பாடசாலைகள் என்பன விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகின. இச் சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டும் 50 க்கும் அதிகமானோர் காயமடைந்தும் உள்ளனர். ஆனால் இச் சம்பவங்கள்பற்றி கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிடவில்லை. தெற்கில் வாழும் மக்களுக்கு யாழ். மக்களின் துன்பங்கள் தெரிவதில்லை.

யாழ். மாவட்டத்தில் போதிய உணவு கையிருப்பில் உள்ளதாக நான் கூறியதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தவறான செய்தியை வெளியிட்டது சவலை தருகிறது.

குண்டு வீச்சுக்களால் மக்கள் பீதியுடனேயே பொழுதைக் கழிக்கவேண்டி உள்ளது. விமானக் குண்டு வீச்சையும், ஷெல் தாக்குதல்சளையும் உடன் நிறுத்த உத்தரவிட வேண்டும். இவற்றால் பெண்கள், குழந்தைகள், முதியோர் போன்றோரே பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு ஹமில்டன் வனசிங்காவிடம் அரச அதிபர் வற்புறுத்தினார்.

நேற்றைய கடுங் காற்றினால் வான் பயிர்கள் பலத்த சேதம்

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குச் சற்று முன்னர் தொடக்கம் நேற்றுக் காலை சுமார் 8.30 மணி வரை கடுங்காற்று வீசியது. கடும் மழையும் பெய்தது.

கடுங்காற்றினால் பனைந்தென்னங்கன்றுகளும் வாழைகளும் பல இடங்களிலும் வேருடன் சாய்ந்தன. வெள்ளம் புகுந்திருந்த வளவுகளில் இருந்த பல குடிசைகள் வீழ்ந்தன. பலவீடுகளின் சுவர்களும் வீழ்ந்தன. மற்றும் பல வீடுகள் சேதமடைந்தன. சேதமுற்ற வீடுகளில் இருந்த ஒரு சிலர் காயமுற்றனர்.

கடல் அலை உயர்வினால் கரையோரங்களில் இருந்த குடிசைகள் சரிந்து விழுந்தன. கரையிலும் இறங்கு துறைகளிலும் கட்டப்பட்டிருந்த றோலர்கள், வள்ளங்கள் மோதுண்டு சேதமடைந்தன.

★ கீரிமலையிலிருந்து இடம்பெயர்ந்துள்ளவர்கள் வாழும் சங்கானை அகதி முகாமில் ஐந்து குடிசைகள் சரிந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

தொண்டமானுடன் பேச்சு தொடர்கிறது

வெளியேற்றத்தை தடுக்க முயற்சி

கொழும்பு டிச. 5

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்பாக அரசாங்கத்துக்குள் தற்போது தோன்றியுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஐ.தே.க செயலாளர் சிறிசேன கூரே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அரசமைப்பு அமைச்சர் சொக்ஸி ஆகியோர் முயற்சிக்கின்றனர்.

''தொண்டமானின் தற்போதைய நிலை'' என்ற தலைப்பில் ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் பி. பி. ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ராவய ஆசிரியர் மேலும் தெரிவித்ததாவது:-

தொண்டமானின் விடயம் தொடர்பாக கலந்துரையாட கடந்த புதன்கிழமை அமைச்சரவை கூடியபோதும் திரு. தொண்டமான் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கு பற்றாது அன்று சென்னை நோக்கிப் புறப்பட்டார்.

இதற்கு முதல்நாள் அரசமைப்பு அமைச்சர் திரு. சொக்ஸி திரு. தொண்டமானைச் சந்தித்து நீண்ட பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

அப் பேச்சுவார்த்தையின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ராஜஸ்தானில் பாரதீய ஜனதா முதல்வர்

புதுடில்லி, டிச. 5

ராஜஸ்தான் மாநிலத்தில் பாரதீய ஜனதாக் கட்சி நேற்று தனது அரசை அமைத்து.

அதன் முதலமைச்சராக திரு. பய்ரான் சிங் ஷேவாக் பதவிப் பிரமாணஞ் செய்து கொண்டார்.

அதேசமயம் 14 கோடி மக்கள் தொகையைக் கொண்ட உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதலமைச்சராக திரு. முலாயம் சிங் யாதவ் நேற்றுப் பதவி ஏற்றார். பாசிசவாத பாரதீய ஜனதாக் கட்சியை மக்கள் முறியடித்துவிட்டனர் என்று திரு. யாதவ் கூறியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட அரிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

நேற்று (04-12-1993) நடைபெறவிருந்த வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் 22-12-1993 ஆம் திகதிக்குப் பின்போடப் பட்டுள்ளது.

கூட்ட நிகழ்ச்சி நிரல் பேராளர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

— தலைவர்.

1993-12-04 (சி-6649)

கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளரும், முன்னாள் யாழ். லயன்ஸ் கழகத் தலைவரும், தற்போதைய மாவட்ட லியோ கழகங்களின் தலைவரும், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப விவசாய ஆலுநர் சபைத் தலைவரும், பிரபல சமூக சேவையாளருமாகிய

லயன் றேமன் முத்தையா

அவர்களின்

மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

- கன்னாகம் லயன்ஸ் கழகம்.

[28290]

கண்ணீர் அஞ்சலி

எமது மாவட்ட லியோ கழகங்களின் தலைவரும் முன்னாள் யாழ். லயன்ஸ் கழக தலைவரும் மனித நேய பெருந்தகையுமாகிய

அமரர் உயர்திரு L. R. முத்தையா

அவர்களின்

பிரிவுச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கல்லூரி சார்பிலும், கழகத்தின் சார்பிலும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லியோ கழகம்,
யாழ் இந்து மகளிர் கல்லூரி.

(28293)

கண்ணீர் அஞ்சலி

முன்னாள் யாழ். லயன்ஸ் கழக தலைவரும் தற்போதைய லியோ கழகங்களின் மாவட்டத் தலைவருமாகிய

லயன் எல். ஆர். முத்தையா

அவர்களின்

திடீர் மறைவுக்கு அன்னாரின் குடும்பத்தினருக்கும், யாழ். லயன்ஸ் கழகத்தினருக்கும், யாழ். மாவட்ட லியோ கழகத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

- மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம்

(6838)

கண்ணீர் அஞ்சலி

லயன் எல். ஆர். முத்தையா

(லியோ கழகங்களின் மாவட்டத் தலைவர்)

அன்னாரது மறைவு எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. அவரது மறைவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- யாழ் வட்ட லியோ கழகம்.

(28294)

எம் இதய அஞ்சலிகள்

ட. றேமன் முத்தையா

(ஓய்வு பெற்ற பொறியியலாளர்)

அவர்களின் மறைவால் எங்கள் முகாமை மக்கள் ஆழ்ந்த துயரமும், அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

டயஸ் வீடமைப்புத் திட்டம்,
தீவகம், நாவலடி.

(28295)

இதய பூர்வ அஞ்சலி

லயன் எல் ஆர். முத்தையா

யாழ். உதவும் கரங்கள் செஷயர் இல்ல ஆரம்ப கால உறுப்பினரும், செயற்குழு அங்கத்தவரும், யாழ். லயன்ஸ் கழக முத்த உறுப்பினரும், முன்னாள் தலைவரும், அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்தில் பல பதவிகள் வகித்து கடமையாற்றியவரும், ஓய்வு பெற்ற நீர்ப்பாசன பொறியியலாளருமான லயன் எல். ஆர். முத்தையாவின் மறைவு எம்மை பேரதிர்ச்சியிலும் ஆழ்ந்த துயரிலும் ஆழ்த்தியுள்ளது. அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அவருடைய குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறுகிறோம்.

தலைவர், செயற்குழு மற்றும்-
இல்ல அங்கத்தவர்கள்.

(உதவும் கரங்கள் செஷயர் இல்லம்)

(28296)

பிக்குவின் கை, கால்கள் கட்டப்பட்டு பணம் சூறை!

மொரட்டுவ விகாரையில் சம்பவம்

இராணுவ பாணியிலான சீருடை தரித்த நால்வர் மொரட்டுவ கொரவெல பகுதி விகாரை ஒன்றிற்குள் நுழைந்து, பிரதம பிக்குவின் கை, கால்களைக் கட்டிப் போட்டு விட்டு, அங்கிருந்து 60 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தையும் 4 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கத்தினாலான சிறிய பௌத்த சின்னம் ஒன்றையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

ஆயுதபாணிகளான கொள்ளையர்கள் விகாரையில் இருந்த வேலையாட்கள் இருவரையும் கட்டிப் போட்ட பின்னரே கொள்ளையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-17)

உ
சிவமயம்
'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தையும்
ஐந்தாம் சமய குரவருமான

நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

அவர்களின்

குருபூசைத் தினவிழா 05-12-1993

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் காலை 8 00 மணிக்கு விசேட பூசையும், மாலை 2-30 மணி தொடக்கம் கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

★ மங்கள இசை:
தவில்மேதை அமரர் என். ஆர். சின்னராசவின் புதல்வர்கள்

★ நூல் வெளியீடு:
"இந்து நெறிச் சஞ்சீகை"

★ சொற்பொழிவு:
பண்டிதர் க. சச்சிதானந்தம் எம். ஏ.

விடயம்

'சமூக உளவியலும் நாவலரின் பிரசார முறையும்'

✲ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகம்

அளிக்கும்

வாத்தியவிருந்து, கானவிருந்து, நடனவிருந்து

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

விளம்பரப் பங்களிப்பு:

குறிஞ்சி மருந்தகம்,
KURINCHI PHARMACY.
No. 3, Model Market, Thirunelvely.

[சி-6636]

கண்ணீர் அஞ்சலி

அமரர் எல்.ஆர். முத்தையா அவர்கள்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும், முன்னாள் தலைவராகவும் கடமையாற்றி தனது அயராத உழைப்பின் மூலம் இணையத்தின் வளர்ச்சிக்கு வழிகோலியவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் குடும்பத்தில் தலைமகனாகவும், வழி காட்டியாகவும், கடந்த 25 வருட காலமாக சமூக சேவையாளனாக இறுதி நாள் வரை பங்காற்றி வந்துள்ளவருமான அமரர் றேமன் முத்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
யாழ். மாவட்டம்

[சி-6651

கண்ணீர் அஞ்சலி

வை எம். சி. ஏ. ஸ்தாபனத்தின் இயக்குநர் சபை முத்த உறுப்பினரும், Y's Men's கழகத்தின் முன்னாள் தலைவரும் ஆகிய

அமரர் உயர்திரு. எல். ஆர். முத்தையா

அவர்களின் பிரிவுச் செய்தியை அறிந்து துயருறுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது நிறுவனங்கள் சார்பில் ஆழ்ந்த அநுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

வைத்திய கலாநிதி
து. வி. ஜெயசுலராஜா
தலைவர்,
வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்.

Y'S MEN'S கழகம்,
யாழ்ப்பாணம்.

(28301)

வாடகைக் கார் உரிமையாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ். மாவட்டத்திற்குட்பட்ட வாடகை மோட்டார் கார் உரிமையாளர்களுக்கான சந்திப்பு ஒன்று எதிர் வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.புதிய மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சகல கார் உரிமையாளர்களையும் இதில் பங்குபற்றுமாறு விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (த-3)

சுவாமி மஹராஜ் இலங்கை வருகிறார்

கொழும்பு, டிச. 5

உலகளாவிய ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் பொதுச் செயலாளர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மஸ்தானந்தஜீ மஹராஜ் இலங்கை வரவிருக்கிறார்.

சுவாமிகள் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் கண்டி, அனுராதபுரம், கதிர்காமம், மகிந்தலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்வார். (ஒ-17)

விளையாட்டு நிகழ்வுகள்

விளையாட்டு அபிவிருத்திக் குழு மாவட்ட ரீதியில் நடத்த உள்ள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கான யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தெரிவுப் போட்டிகள் நாளை முதல் பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும்.

தெரிவுப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் கோட்டக்கல்வி அலுவலகங்களால் வெளியிடப்பட்டிருப்பதாவும்—

விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் இருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

ஆதீன முதல்வருக்கு வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், டிச. 5

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளுக்கு இன்று மாலை 5 மணிக்கு இளங்கலைஞர் கலா மண்டபத்தில் வரவேற்பு விழா நடைபெறுகின்றது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

முன்னதாக இன்று பிற்பகல் 4 மணிக்கு நாதஸ்வர வித்துவான்களின் இன்னிசையுடன் சுவாமிகள் நல்லை ஆதீனத்தில் இருந்து கோவில் வீதி, சட்டநாதர் வீதி வழியாக இளங்கலைஞர் மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப் படுவார். (த)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கனடா பூரண ஆதரவு தரும்

அந்நாட்டின் அதிகாரி தகவல்

"இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்படும் முன்முயற்சிகளுக்கு கனடா பூரண ஆதரவு வழங்கும்."

கனடா அரசின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் திரு. போர்சி ஏபில்ஸ் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் அங்கு சென்றிருந்த யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத்துறைத் தலைவர் வண. எஸ். ஜே. வி. சந்திரகாந்தனுடன் நடத்திய பேச்சுக்களின் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

கனடா அரசின் வெளிவிவகார அமைச்சு அலுவலகத்தில் நடந்த இப்பேச்சுக்கள் பல மணிநேரம் நடந்ததாகவும்—

இனப்பிரச்சினை தீர்வுக்கு உள்ள தடைகள், தீர்வுகாணக் கூடிய சூழ்நிலை, வடக்கு கிழக்கு நிலைமை போன்ற விடயங்கள் குறித்து இப்பேச்சுக்களின்போது விவரங்கள் கேட்கப்பட்டதாகவும்— வண சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இனப்பிரச்சினை குறித்து பேச்சுக்களை கனடாவில் நடத்த முழு ஒத்துழைப்பு வழங்கவும் கனடா அரசு தயாராக விருப்பதாகவும் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சு செயலாளர் கூறினார் என்றும் அவர் மேலும் சொன்னார்.

முதன்மை ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ். கல்வித் திணைக்கள முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதாக யாழ். தெற்கு வலய கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முதன்மை ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் பற்றிய விவரம் கோட்டக்கல்வி அலுவலகங்களால் வெளியிடப்பட்டிருப்பதாவும்—

விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் கோட்டக் கல்வி அலுவலகங்களில் இருந்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று, எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இன்று

கடந்த மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிகழ விருந்த செங்கை ஆழியானின் "யாழ்ப்பாணத்து இராத்திரிகள்" நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும். (க-17)

★ ★ ★

ஐந்தாம் ஆண்டு விடைத்தாள் மதிப்பீடு குறிப்பிட்டபடி இன்று காலை 8.30 மணிக்கு யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். அறிவுறுத்தப்பட்ட சகல மதிப்பீட்டாளர்களையும் வருகை தரும்படி யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (க)

★ ★ ★

தேசிய கல்வி நிறுவகப் பட்டப்பின் கல்வி டிப்புளோமா கல்வி நெறியில் பயிலும், யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலையத்தை சேர்ந்த முதலாம், இரண்டாம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. தி. கமலநாதன் அறிவித்துள்ளார். (த-3)

★ ★ ★

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் கூட்டமொன்று இன்று காலை 10 மணிக்கு உடுவில் பிரதேச செயலர் பணிமனையில் நடைபெறும். இக்கலந்துரையாடலுக்கு இப்பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம சேவை அலுவலர்களையும் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களையும் தவறாது சமுகம் தரும்படி கோரப்பட்டுள்ளது. (க)

★ ★ ★

யாழ். அம்பாள் வீதி நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் மாதாந்த தொடர் அறிவியல் கருத்தரங்கு இன்று மாலை 6 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் அரசகுலசூரியன் தலைமையில் நடைபெறும். (த 30)

★ ★ ★

1992 ஏப்ரல் விசேட பரீட்சையில் தோற்றி பல்கலைக் கழக அனுமதி தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குப் பரிகாரம் தேடுமுகமாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுப்பது சம்பந்தமாக ஆராய பொதுக் கூட்டம் ஒன்று இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (க)

மார்க்கோசின்
MARGOCIN

பூச்சிக் கொல்லி

எல்லா விவசாய ரசாயன விற்பனைசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

இது ஒரு மிக்வைற் தயாரிப்பு.

(சி-6648)

யாழ்ப்பாண தொழினுட்பக் கல்லூரியில் மேலதிக பயிற்சி நெறிகள் - 1994

பின்வரும் பயிற்சி நெறிகளை **1994** ஆம் கல்வி யாண்டில் பயில்வதற்கான விண்ணப்பங்களை **1993—12—20** ஆம் திகதி வரை "அதிபர், தொழினுட்பக்கல்லூரி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் தகுதியுடையவர்கள் அனுப்பி வைக்கவும்.

பயிற்சிநெறி.

1. உயர் தேசிய வணிகத் தேர்வு
2. வியாபாரமும் நிதியியலுமான தேசிய டிப்புளோமா

மேலதிக விவரங்களை அறிய யாழ். தொழினுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளவும்.

க. ஜெயரத்தினம்
அதிபர்.

தொழினுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
93-12-04.

(சி/6652)

UNIVERSITY OF JAFFNA, SRILANKA

Admission Test for the Postgraduate/ DiPloma in English Language Teaching 1992/93

The Admission Test for the above course will be held on 1993. 12. 09 at 10.00 a.m. in the Ramanathan Hall, University of Jaffna. Please collect your admission cards on 7th & 8th of December, 1993, personally at the Examination Branch.

Registrar

1993.12.04

(C/6650)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் நட்சத்திரம் 'ஷூமேக்கர் - லெவி'

வியாழன் கிரகத்துடன் மோதும் ஆபத்து!

அடுத்த ஜூலையில் ஏற்படும் அழிவு
விஞ்ஞானிகள் தரும் எச்சரிக்கை

சூரிய மண்டலத்தில் உள்ள மிகப்பெரிய கிரகம் வியாழன். பூமியிலும் பார்க்க பதினொரு மடங்கு பெரிதாக வியாழன் உள்ளது.

அதன் தரைத்தோற்றம் பூமியைப் போன்றதாக இல்லை. வாஹத ரசன் மேகக் கூட்டங்களால் அது சூழப்பெற்றுள்ளது.

அது தன்னைத்தானே ஒரு தடவை சுற்றிக் கொள்ள 9 மணித்தியாலம் 50 நிமிடங்கள் எடுக்கின்றன

வியாழன் கிரகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. வான சாஸ்திர விஞ்ஞானிகள் இது பற்றிய எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

அந்த ஆபத்து வால் நட்சத்திர உருவில் வந்துள்ளது. ''ஷூமேக்கர் – லெவி 9'' என்று பெயரிடப்பட்ட அவ்வால் நட்சத்திரம் இப்போது வியாழனைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

அந்த வால் நட்சத்திரம் ஒரு முத்து மாலை போன்று தோற்றமளிக்கிறது. 21 துண்டுகளாக, ஒரு மைல் முதல் 3 மைல்கள் வரை இடைவெளி வித்தியாசத்தில் பல துண்டுகளைக் கொண்ட அந்த நட்சத்திரம் காணப்படுகிறது.

ஓராண்டுக்கு முன்னர்

முன்னர் ஒரு தடவை — ஒரு வருடத்துக்கு முன் வால் நட்சத்திரம் ஒன்று வியாழன் கிரகத்தை நெருங்கி வந்தது. ஆனால் மோதவில்லை. எனினும் வியாழனின் பிரமாண்டமான புவி ஈர்ப்புச் சக்தி அதனை பல துண்டுகளாகப் பிய்த்தெறிந்து விட்டது.

துண்டுகளான அவ்வால் நட்சத்திரத்தை கடந்த மார்ச் மாதம் தான் ஷூமேக்கர் மற்றும் லெவி ஆகிய விஞ்ஞானிகள் முதலில் கண்டு பிடித்தனர். அவ்விஞ்ஞானிகளின் பெயர்களினால் அவ்வால் நட்சத்திரம் பின்னர் அழைக்கப்படலாயிற்று. 'ஷூமேக்கர் - லெவி 9' வால் நட்சத்திரத்தின் துண்டுகள் விண்வெளியில் ஒரு லட்சம் மைல்கள் வரையில் சிதறிக் காணப்பட்டன. சூரிய ஒளியில் அவை மின்னிக் கொண்டிருந்தன. விஞ்ஞானிகளுக்கு அவை முத்து மாலை ஒன்று விண்வெளியில் மிதந்து கொண்டிருப்பதை நினைவு படுத்தின.

படம் எடுத்த ஹபிள் தொலைநோக்கி

'ஷூமேக்கர் – லெவி 9' வால் நட்சத்திரத்தை விண்ணில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஹபிள் விண்கலத்தில் உள்ள தொலைநோக்கி இக்கோடை காலத்தில் படம் எடுத்தது. அப்படங்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. அவ்வால் நட்சத்திரம் 21 துண்டுகளாகச் சிதறியுள்ளதை அப்படங்கள் மூலம் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டனர். ஒவ்வொரு துண்டின் மையப்பகுதியும் மூன்று மைல் அகலமானதாக இருக்கிறது.

வியாழன் எதிர்நோக்கும் ஆபத்து

இவ்வால் நட்சத்திரத்தின் துண்டுகளின் போக்கு மற்றும் அது செல்லும் பாதை பற்றி அரிசோனா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜே. மெலோஷ், டாக்டர் ஜேம்ஸ் ஸ்கொட்டி ஆகிய விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

இவ்வால் நட்சத்திரத்தின் துண்டுகள் அனைத்தும் ஒன்றன் பின் ஒன்றாக — ஆறு நாட்கள் கால இடைவெளியில் — வியாழன் கிரகத்தை அடையும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஆறு நாட் காலம் அடுத்த ஆண்டு ஜூலை 18ஆம் திகதி ஆரம்பமாகிறது இக்காலம் ஜூலை 23 ஆம் திகதி முடிவடைகின்றது.

பெரும்பாலும் ஜூலை 21 ஆம் திகதி இவ்வால் நட்சத்திரத் துண்டுகள் வியாழன் கிரகத்துடன் மோதும் என்று அவர்களின் ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டது.

மோதல் பயணம்

வியாழன் கிரகத்துடன் நேரடியாக மோதும் பயணத்தை இவ்வால் நட்சத்திரம் தற்போது மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூமியிலிருந்து நோக்கும் போது சூரியனுக்கு மறுபுறத்தில் பயணம் செய்யும் இவ்வால் நட்சத்திரம் கண்களுக்குத் தெரியாமல் இருப்பினும், விஞ்ஞானிகளின் கவனம் முழுவதும் அது வியாழனுடன் மோதுவதால் ஏற்படும் விளைவுகளை பதிவு செய்வதில் உள்ளது.

பூமியிலும், விண்வெளியிலும் வரிசையாக தொலைநோக்கிகளை விஞ்ஞானிகள் தயாராக வைத்துள்ளனர்.

மோதல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் ஜூலையில் — வியாழனில் இருந்து 15 கோடி மைல் தொலைவில் — கலிலியோ விண்கலமும் 'வொயேஜர் – 2' விண்கலமும் இருக்கும் என்றும் —

அப்போது அவை இம்மோதலை நேரடியாக தெளிவாகப் பதிவு செய்யும் என்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

அணு ஆயுதங்களை விட 10 ஆயிரம் மடங்கு அழிவு சக்தி

இவ்வால் நட்சத்திரம் வியாழனுடன் மோதும் போது ஏற்படும் தாக்கத்தின் அளவு பற்றியும் விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

வல்லரசுகளுக்கு இடையேயான கெடுபிடி யுத்தம், உச்சக் கட்டத்தில் இருந்தபோது உலகில் இருந்த அணு ஆயுதங்களின் அழிவுச் சக்தியிலும் பார்க்க 10 ஆயிரம் மடங்கு அதிகமான தாக்கத்தைவியாழனுடனான மோதல் உருவாக்கும் என்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளார்கள்.

வியாழனின் பல நிற முகில்கள் ஊடாக வால் நட்சத்திரத் துண்டுகள் வினாடிக்கு 40 மைல் வேகத்தில் செல்லும் போது அவை பிரகாசமான நெருப்புக் குண்டுகள் போல் காட்சி அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமி சந்தித்த பேரழிவு

ஆறுகோடி 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியுடன் வால் நட்சத்திரம் ஒன்று மோதி பெரிய அழிவை ஏற்படுத்தியது.

அப்போது உலகில் இருந்த டினோசர் உட்பட பல அரிய உயரினங்கள் அழிந்துபோயின என்று கூறப்பட்டது.

அப்படியான ஒரு பேரழிவுடன் ஒப்பிடக்கூடியதான ஒரு நிகழ்வாக வியாழனுடன் வால் நட்சத்திரம் மோதுவது அமையலாம் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு.

அப்படியான ஒரு பேரழிவு பற்றி காண — ஆராய — ஆறு கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் உலக விஞ்ஞானிகளுக்குக் கிடைத்த முதல் வாய்ப்பாக இது கருதப்படுகிறது.

வியாழனின் வளிமண்டலத்தைத் துளைத்துக் கொண்டு வால் நட்சத்திரத்தின் துண்டுகள் செல்வதால் என்ன நடக்கும் என்பதை விஞ்ஞானிகளினால் உறுதியாகக் கூறமுடியவில்லை.

இப்படி ஒரு அசாதாரண அற்புத நிகழ்வை ஆய்வு செய்யும் வாய்ப்பு முன்னர் எப்போதும் கிடைக்காத படியால் இம்மோதலின் போது எதனை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி நிச்சயமாகக் கூற முடியாது என விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்கின்றனர். ★

தொகுப்பு:
தீபன்ராஜா

6 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமி சந்தித்த பேரழிவு போன்றது

சூரிய காந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

பகவானை அடைய சுலபமான வழி

பசுவின் பாலிலிருந்து தயிர், தயிரிலிருந்து மோர், மோரிலிருந்து வெண்ணெய், வெண்ணெயிலிருந்து நெய் என்று எத்தனை வகைவகையாக நாம் பிரித்தெடுக்கிறோம்? அதே போல் ஆழ்ந்த அனுபவம், அன்றாடப் பிரார்த்தனை, கருணை, மற்றவர்களுக்கு உதவுதல், எல்லோரையும் வித்தியாசம் இன்றி பார்த்தல், பழகுதல் இவற்றை நம் வாழ்வில் கைக்கொண்டு நடந்தால் பாலுக்குள்ளே மறைந்து கிடக்கும் நெய்யைப் போல பகவான் உங்கள் அத்தனை பேர் மனதிலும் உறைந்து கிடப்பது தெரியும்.

உபநிஷதம்.

தகவல்:
கலாநிதி கனகராசா.

ஒரு கோடி 40 லட்சம் பேரை பீடித்திருக்கும் "எய்ட்ஸ்" நோய்

கடந்த முதலாம் திகதி உலகஎய்ட்ஸ் தினமாகும். ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் முதல் திகதியை உலக எய்ட்ஸ் தினமாக உலக சுகாதார நிறுவனம் பிரகடனப்படுத்தியுள்ளது கொடிய தொற்று நோயான ''எய்ட்ஸ்'' பற்றிய தகவல்கள் இக்கட்டுரையில் தரப்பட்டுள்ளன

இந்த நூற்றாண்டின் எண்பதாம் ஆண்டுகளில் கண்டு பிடிக்கப்பட்ட ஆட்கொல்லி ''எய்ட்ஸ்'' நோய் தற்பொழுது தங்கு தடையின்றி உலகமெலாம் பெருக்கெடுத்து பரவி வருகின்றது.

கடந்த மே மாதத்தில் உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்ட மதிப்பீட்டின்படி ஒரு கோடியே நாற்பது இலட்சம் மக்கள் எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் ''எச். ஐ. வி.'' கிருமியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டாயிரமாம் ஆண்டளவில் 3 கோடி முதல் 4 கோடி மக்கள் இக்கிருமியால் பாதிக்கப்படுவார்கள் என்றும் இந்த ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது.

ஆபிரிக்காவின் சகாராப் பகுதிதான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசமாகும். அங்கே 80 இலட்சத்துக்கும் மேலான மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் அரைவாசி முதல் மூன்றில் இரண்டு பகுதியினர் கிழக்கு ஆபிரிக்காவையும் மத்திய ஆபிரிக்காவையும் சேர்ந்தவர்கள். ''எச். ஐ. வி.'' கிருமி இதோடு விட்டு வைக்காமல் தென் ஆபிரிக்காவுக்கும் மேற்கு ஆபிரிக்காவுக்கும் பரவிக் கொண்டிருக்கிறது.

இக்கிருமி பரவப் பரவ எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கையும் ஆபிரிக்காவில் அதிகரித்துக் கொண்டே போகிறது.

ஏற்கனவே சகாராப் பகுதி ஆபிரிக்காவில் பதினேழரை லட்சம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் எய்ட்ஸ் நோய் வாய்ப்பட்டுள்ளார்கள்.

இந்த எண்ணிக்கை உலகில் உள்ள எய்ட்ஸ் நோயாளிகளின் தொகையில் மூன்றில் இரண்டு பகுதியாகும். இந்த நூற்றாண்டின் முடிவில் ஆபிரிக்காவில் மொத்த எய்ட்ஸ் நோயாளிகளின் தொகை 50 லட்சத்தைத் தாண்டலாம்.

ஆசியாவில் 15 லட்சம் பேர்

இப்பொழுது தென் ஆசியாவிலும் தென் கிழக்காசியாவிலும் எய்ட்ஸ் பயங்கர அளவில் பரவுகிறது. பத்தாண்டுகளுக்கு முன் சகாராப்பகுதி ஆபிரிக்காவில் பரவிய வேகத்தில் இப்போது தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் எய்ட்ஸ் பரவுகிறது.

இப்பிரதேசங்களில் 15 லட்சத்துக்கு மேற்பட்டோர் ''எச். ஐ. வி.'' கிருமியால் பாதிக்கப்பட்டுள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் மதிப்பிட்டுள்ளது. இதில் பெரும்பகுதியினர் இந்தியாவையும் தாய்லந்தையும் சேர்ந்தவர்கள்.

லத்தீன் அமெரிக்காவிலும் மேற்கிந்தியத் தீவுகள் முதலிய கரிபியன் நாடுகளிலும் 15 லட்சத்துக்கு மேலான வயது வந்தவர்களுக்கு ''எச். ஐ. வி.'' கிருமிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கிலும் வட ஆபிரிக்காவிலும் இதுவரை 75 ஆயிரம் பேருக்கு எய்ட்ஸ் நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய ஆசியாவிலும் தற்போது 50 ஆயிரம் பேருக்கு ''எச். ஐ. வி.'' தொற்றியுள்ளது. கிழக்கு ஆசியாவிலும் பசிபிக் நாடுகளிலும் வயது வந்தவர்களில் 25 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எய்ட்ஸ் ஆட்கொல்லி நோய் பெண்கள், குழந்தைகளையும் பீடித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் 1993 செப்டம்பர் 7 ஆம் திகதி வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி இரண்டாயிரமாம் ஆண்டளவில் 1 கோடியே 30 லட்சத்துக்கு மேலான பெண்கள் எய்ட்ஸ் கிருமியால் பாதிக்கப்படுவார்கள். இவர்களில் 40 லட்சம் பேர் இறப்பார்கள்.

பெண்கள் மத்தியில் பாதிப்பு அதிகரிக்க அதிகரிக்க எய்ட்ஸ் கிருமி வயப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது.

இதுவரை 10 லட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் ஐந்து லட்சம் பேர் ஏற்கனவே எய்ட்ஸ் நோயாளிகளாகிவிட்டனர்.

தொழிற்துறை மயமாகிய நாடுகளில் தன்னினச் சேர்க்கையாளர்களாலும், போதைப் பொருட்களை ஊசி மூலம் ஏற்றுபவர்களாலும் கூட 'எய்ட்ஸ்' பரவுகிறது. ★

தொகுப்பு:
- பாரதிநேசன் -

'எய்ட்ஸ்' குறித்து சில தகவல்கள்

✻ எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?

எய்ட்ஸ் நோய் முக்கியமாக இரண்டு முறைகளில் பரவுகிறது. முதலாவது, இரத்தத்தின் மூலம். மற்றையது உடல் உறவின் மூலம்.

எய்ட்ஸ் நோயுற்ற ஒருவரின் குருதி இன்னொருவரின் குருதியுடன் சேரும்போது அது பரவுகிறது.

எய்ட்ஸ் நோயாளி ஒருவருடன் பழகும்போது, எய்ட்ஸ் நோய் இல்லாதவர் தனது கைகளிலோ, உடலிலோ சிறு காயங்கள் கூட இல்லாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வது நல்லது. நோயாளியின் குருதி வழியாக வெளியேறும் வைரஸ் இந்தக் காயங்களினூடாகப் பரவுவதற்கு வாய்ப்புண்டு.

காயங்கள் உடலில் இருக்கத்தக்கதாகப் பழக வேண்டி ஏற்பட்டால் தங்களின் காயங்களை நீர் புக முடியாதபடி பிளாஸ்டரால் மூடிவிட வேண்டும்.

போதை ஏற்றும் ஊசி மருந்து (''ஹெறின்ஞ்'')மூலமும் எய்ட்ஸ் நோய் பரவ முடியும்.

உடல் உறவு மூலமும் எய்ட்ஸ் பரவுகிறது. இதனைத் தவிர்ப்பதற்கு ''ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன்'' என்ற சமூக நற்பழக்கத்தைப் பின்பற்றுவதே சிறந்த வழி.

தவறான வழிகளை நாடுவோர்க்கு குறைந்த பட்சம் கருத்தடை உறைகளைப் பாவிப்பது நல்லது.

✻ எய்ட்ஸ் நோயாளியுடன் பழகினால் அது தொற்றுமா?

எமது உடலில் காயங்கள் இல்லாவிட்டால் நாம் எய்ட்ஸ் நோயாளியுடன் நெருங்கிப் பழகலாம். மற்றும்படி முத்தமிடலோ, கட்டி அணைப்பதாலோ, ஒரே பாத்திரத்தைப் பாவிப்பதாலோ இன்னோரன்ன செயல்களினாலோ அது பரவுவதில்லை.

ஆனால் எய்ட்ஸ் நோயாளி முகச் சவரம் செய்யும் ''றேஸர்'', பல் துலக்கும் பிரஷ் ஆகியவற்றைப் பாவிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

✻ எய்ட்ஸ் நோய் பரப்பும் 'எச்.ஐ.வி.'' வைரஸ் எத்தகையது?

உடலிலே இருக்கும் போதுதான் அதற்கு உயிர் இருக்கும். வெளியே வந்து சிறிது நேரத்தில் அது இறந்துவிடும். அந்த வகையில் அது மிகவும் பலம் குறைந்த வைரஸ்.

நுளம்புகளால் எய்ட்ஸ் பரவுமா?

நுளம்புகளால் எய்ட்ஸ் பரவுவதற்கு வாய்ப்பு இல்லை என்று மருத்துவ வல்லுநர்கள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஐந்து மாதங்கள் நிரம்பிய கிளிக்கோழிகள், இரண்டு மாத சில்க்கி கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. கந்தசாமி அன் சன்ஸ், இல. 15, ஆடியபாத றோட். நல்லூர். (28276)

பத்து நாட்கள் நிரம்பிய பிராமா, பாபடி கிறேல் கோழிக்குஞ்சுகளும், முட்டை இடும் கலர் சில்கி, பிறேகில், பாமால் கோழிகளும் விற்பனைக்குண்டு. அடைவைக்க உகந்த பண்டம், பாமால், சில்கி, பிறேகில் முட்டைகளும் பெற்றுக்கொள்ளலாம். 684 (91), நாவலர் வீதி, (நாவாந்துறை வீதி), ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (28292)

ஒரு சோடி வான்கோழி, கினிகோழிகள், பண்டம் கோழிகள் விற்பனைக்குண்டு. அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பண்டம் கோழிமுட்டைகள் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, யாழ்ப்பாணம். (28257)

மலனப்பொருளியல்

ஆண்டு 9, மாணவர்களுக்குப் பயன் தரும் மனைப்பொருளியல் வினா - விடை வெளிவந்துவிட்டது. பரீட்சையில் அதிசிறப்புச் சித்திபெற உதவும் நூல். பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (28237)

வெளிவந்துவிட்டது!

இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் எழுதிய தமிழ் இலக்கணம் வினா–விடை (ஆண்டு–9, 10, 11) வெளிவந்து விட்டது. பரீட்சைகளில் அதிசிறப்புச் சித்திபெற உதவும் அரிய வழிகாட்டி. பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (28235)

சிறுவர் நூல்கள்

நத்தார், புதுவருட காலங்களில் சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கக் கூடிய, இங்கிலாந்து, யப்பான் நாட்டுப் புத்தகங்களை தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள; ஸ்ரீகாந், மக்மிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6566)

பிரயோக கணிதம்

நிலையியல் பகுதி I. சாவியும் அதன் பிரயோகங்களும், மாதிரி வினாத்தாள்களும்–விடைகளும் ஆகிய நூல்கள் யாழ். நகரெங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர் சி. துரையப்பா, B.Sc. (Maths) M.Sc. (Agric.), MAES (Sri-Lanka). (6837)

நூளம்புத் தொல்லையா?

நமக்கில்லை நூளம்புத் தொல்லை. நாம் இரவில் "நீம் தூபம்" புகைத்து நிம்மதியாகத் தூங்குகிறோம். ஒரு பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே. 25 பக்கற் கொண்ட ஒரு காட் விலை ரூபா 60/-. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மில்க்வைற்" (சி–6645)

சோதிடம்

கோளறிவாளர், கைப்பலன் அறிஞர், திருமணம், காதலில் கிடைப்பவர் தோற்றம், குணநலம், உத்தியோகம் திக்குத்திசை, குடும்ப நிலைமை அறியவும், பிற நாட்டுச் சாதகம், ஆங்கிலத்தில் பலன்களுடன் எண்சாத்திரம், தீர்க்கமான ஆலோசனைக்கு முப்பது ஆண்டுகள் தேர்ச்சியுடைய இராஜேந்திரன், கோயில் வீதி, (முதல் வீடு), நிழக்குக் கொக்குவில். (28274)

பட்டயக் கணக்காளர்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகமானது யாழ். மாணவர்களுக்காக தகவல் மற்றும் சேவைகளை இல. 140, பலாலி வீதியில் அமைந்திருக்கும் எமது நிறுவனத்தில் வழங்கவுள்ளது. தகவல் பெற விரும்பும் மாணவர்கள் திரு. ம. இராஜநாயகம் (பட்டயக் கணக்காளர்கள்) அவர்களிடம் தொடர்புகொள்ளவும். (28283)

வாடகைக்கு

பாடசாலை மாணவருக்கு அறை வாடகைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 576, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28256)

மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற, 34 வயது T. A.க்கும், 32 வயது அரசாங்க உத்தியோகத்ருக்கும், 33 வயது Lab. Assistantக்கும், குற்றமுள்ள 37 வயது T. A.க்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (28289)

மக்கள் வங்கி

எழுதுவினைஞர். சுருக்கெழுத்தாளர் தெரிவுக்கான

போட்டிப் பரீட்சை

1 மாத கால

துரித பயிற்சி வகுப்புகள்

திங்கள், புதன், வெள்ளி தினங்களில்
3-00 — 5-30

ஆரம்பம் **06 - 12 - 1993**
3-00 மணி

முழுக்கட்டணம்: **200/-**

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3RD CROSS STREET,
JAFFNA.
(சி–6644)

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்தலும்



அமரர்
செல்வவிநாயகம் விசாகசுந்தரம்

மலர்வு: 1917 – 10 – 08 உதிர்வு: 1993 – 11 – 22

எமைப் பிரிந்து எங்கு சென்றீர் ஐயா!

தாயுமாகி தந்தையுமாகி
தரணியாளும் மன்னவன் போல
நேயமோடு காத்து வந்தீர்
நேரிய நெறிகள் சொல்லி வைத்தீர்!

எமது வாழ்வில் ஏற்றங் காட்டி
எம்மையின்று உயர்த்தி விட்டு
தமது பணிகள் முடிந்த தென்றோ
தவிக்க விட்டு எங்கு சென்றீர் ஐயா!

குடும்ப வாழ்வை உயர்த்தி – பிறர்
குடும்ப வாழ்வு உயர வாழ்ந்து
எடுத்த பணிகள் எல்லாம் முடித்து
எமைப் பிரிந்தெங்கு சென்றீர் ஐயா!

சமய உலகில் சமூக வாழ்வில்
இமயமாக உயர்ந்து நின்றீர்
எமது வாழ்வின் ஏற்றம் காணா
எமைப் பிரிந்து எங்கு சென்றீர் ஐயா!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எமது அன்பு நிறைந்த, அருமை மிகுந்த எமது தலைவர் செல்வவிநாயகம் விசாகசுந்தரம் அவர்கள் 22 – 11 – 1993 இல் திடீரென இறைபத மெய்தி எம்மையெல்லாம் திகைப்பிலும் மனவேதனையிலும் ஆழ்த்தியிருந்த போதும் 23 - 11 - 1993 இல் நேரில் கலந்து கொண்ட உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், வங்கி ஊழியர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, 07 – 12 – 1993 செல்வாய்க்கிழமை நடைபெறும் எமது தலைவரின் 16ஆவது நாள் நினைவஞ்சலி அந்தியேட்டி வீட்டுக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- குடும்பத்தினர்.

7, கலட்டி வீதி,
பருத்தித்துறை. (28288)

அரியாலை ஐக்கிய கழகம்

நடாத்தும்

வட மாகாண ரீதியான சுற்றுப்போட்டிகள்-93

✲ அமரர் E. K. குமரையா ஞாபகார்த்த
உதைபந்தாட்டப் போட்டி
(9 பேர்)

✲ அமரர் M. சிவராத்தினம் ஞாபகார்த்த
கரப்பந்தாட்டப் போட்டி
(SET - UP)

✲ திருக்குமரன் மல்ரி சேவிஸ்,
ராணி விறகுகாலை,
ஸ்ரான்லி சொப்பிங் சென்ரர்
ஆகியவற்றின் ஆதரவில்
வலை பந்தாட்டப் போட்டி

✲ ஜெயா வைண்டிங், மேகாஸ் வீடியோ
ராஜா பிரம்புத் தொழிற்சாலை
ஆதரவில்
எறிபந்தாட்டப் போட்டி
(மென்பந்து 12ஓவர் 7 பேர்)

விண்ணப்பக் கட்டணம் தனித்தனி 50/-
விண்ணப்ப முடிவு திகதி: **15 – 12 – 1993**

● தொடர்பு:
384, கண்டி வீதி, அரியாலை,
கழக காரியாலயம்.
1. S. K. சண்முகலிங்கம்,
அ/ சனசமூக நிலையம் அருகில்.
2. S. சதானந்தபோதம்,
ராணி விறகுகாலை, அரியாலை.
3. செயலாளர் கழக அலுவலகம்.

(28284)

மக்கள் வங்கி தொழில் வாய்ப்பு

எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப் பரீட்சைக்கான

விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது விவேகம், பொது அறிவு

ஆரம்பம்: **06 - 12 - 1993**
மு. ப. 9-00 மணி

✲ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள் ✲
✲ தொடர்ந்து 10 தினங்கள் ✲

● இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
● மு.ப. 9-00 மணி முதல்—12-00 மணி வரை
● நாளாந்தக் கட்டணம் ரூபா 25-00

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்) (சி-6581)

தேவை

மொழிபெயர்ப்பாளர்கள் (ஆங்கிலம் - தமிழ்)

தொழில்நுட்பம், இலக்கியம், அரசியல், திரைப்படமொழி மாற்றம் ஆகிய துறைகளில் அனுபவமுள்ளோர் விண்ணப்பிக்கவும், வீட்டிலிருந்து கொண்டே பணியாற்ற விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

அழகியற் பாணி எழுத்தர்கள்

புத்தக முகப்பு அட்டை உருவாக்குவதில், முன் அனுபவம் உள்ளோர் விண்ணப்பிக்கவும்.

இல. 577
C/O உதயன்
யாழ்ப்பாணம்.

(28299)

பாதுகாப்பு உத்தியோகத்தர்

பாதுகாப்பு உத்தியோகத்தர்/பயிலுநர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், 5அடி 4அங்குலத்துக்குக் குறையாத உயரமும், 30 அங்குலத்துக்குக் குறையாத மார்புச் சுற்றளவும் உடையவராக இருக்க வேண்டும்.

முன் அனுபவம், கல்வித் தகைமை, நற்குணம் ஆகியவற்றுக்கான சான்றிதழ்களுடன் 06-12-1993, 07-12-1993 ஆகிய தினங்களில் முற்பகல் 9-30 மணிக்கும் நண்பகல் 12மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

ஆதீனத்தின் பணி

சமயங்கள் மக்களின் வாழ்க்கை நெறிகள். அதனால் ஒழுக்கம் நிறைந்த சமூகத்தைக் கட்டி வளர்ப்பதில் சமயங்களின் பணி மகத்தானது. மக்களை நெறிப்படுத்தும் கடமையில் மத நிறுவனங்கள் செவ்வனே பணியாற்ற முடியும்.

இதற்கு அப்பால் — போர் மற்றும் அழிவு காலங்களிலும் சமூகத்துக்கு — மக்களுக்கு — உதவும் பணிகளையும் சமய பீடங்கள் சிறப்புறச் செய்யலாம்; செய்ய வேண்டும்.

இந்த வகையில் — தமது தாயகத்தை மீட்பதற்கான விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து நிற்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு — விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் கண்ட அழிவுகளுக்கு — உரிய நிவாரணம் வழங்கும் பணிகளில் பல்வேறு சமய, சமூக நிறுவனங்கள் முன்னிற்கின்றன.

சமய நிறுவனங்கள் இத்தகைய பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தமது ஆன்மீகப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவற்றுக்கு போதிய நிதிவளம் தேவை.

சில சமய அமைப்புகள் வெளிநாட்டில் உள்ள தமது தலைமை அமைப்புகளிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்கின்றன. காலம் தவறாது நிதியாகவும் பொருளாகவும் கிடைக்கும் உதவிகளைக் கொண்டு இந்த அமைப்புகள் இங்கு சிறந்த முறையில் சமூக, நிவாரணப் பணிகளைச் செய்து வருகின்றன.

இதற்கு மறுபுறத்தில் — தமிழீழத்தையே தமது தாயக நிலையமாகக் கொண்டு செயற்படும் பல மத நிறுவனங்களும் இயங்குகின்றன.

அவற்றில் ஒன்று தான் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

நல்லுரைகளினாலும் திருத்தொண்டுகளினாலும் ஒப்பற்ற நிலையில் வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகளின் பேரு ழைப்பால் எழுந்த ஆதீனம் இது.

தமிழீழத்தில் ஒரேயொரு ஆதீனமாக விளங்கி, இங்கு சைவத்துக்கும் தமிழுக்கும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இது வர்த்தக, வியாபார நோக்கம் கொண்ட ஒரு நிறுவனம் அல்ல; இதற்குப் பெரும் சொத்துக்கள் அல்லது வருமானங்களும் இல்லை.

இருந்தும் கிடைக்கும் நிதியில் செலவைக் கட்டுப்படுத்தி சைவப் பணியாற்றி வருகிறார் ஆதீனத்தின் தற்போதைய முதல்வராக மிளிரும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்.

எமது மண்ணில் இருந்து செயற்படும் இத்தகைய சமய நிறுவனங்களுக்கு உதவ வேண்டியது பூர்வீக சைவத் தமிழ் மக்களாகிய எமது கடமை.

இந்த வகையில் நல்லை ஆதீனத்தின்பால் அபிமானம் கொண்ட சைவ அபிமானிகள் நல்லை ஆதீனப் பராமரிப்பு நிதியம் ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். கணிசமான தொகைப் பணத்தை அந்த நிதியத்தில் சேர்த்து அதனை நல்லை ஆதீன சுவாமிகளிடம் கையளிப்பதற்கு ஒரு நிகழ்வையும் இன்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தையாகவும் ஐந்தாம் சமயக்குரவராகவும் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத் தினத்தன்று இந்நிகழ்வு இடம் பெறுவது சாலப் பொருத்தமானதாகும்.

பாரதத்தின் புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்து திரும்பியிருக்கும் நல்லை ஆதீன முதல்வருக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வாகவும் இன்றைய விழா நடைபெறுகிறது.

இன்றைய நிகழ்வு சிறப்புற வாழ்த்தும் அதே வேளையில் —

நல்லை ஆதீனம் போன்ற சமய நிறுவனங்கள் வலுவுற்றுத் நிகழ்வதற்கு உதவ வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு சைவத் தமிழ் மகனுக்கும் உண்டு என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

தேர்தலில் வாக்குத் தேடக் கணக்குப் போட்டு
தென்னிலங்கைக் கட்சிகள் அணி கட்டுகின்றன

வடக்கு - கிழக்கில் நிலவுவது பயங்கரவாதமும் இனப் பிரச்சினையும் ஆகும்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருப்பவர் இலங்கை அரசியலில் கிழட்டு நரி என்று பட்டப் பெயர் சூட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா.

ஈழத்தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாத ஒன்றாக, ஆறாத பலணாக நீழ் படிந்திருப்பதற்கு காரணஸ்தர்களில் ஒருவர் ஜே. ஆர். என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

தமிழர்களை இந்த நாட்டில் அடிமைகளாக, இரண்டாம் தரப் பிரசைகளாக மட்டுமே வாழ அனுமதிக்க முடியும் என்பது பௌத்த-சிங்கள பேரினவாத தத்தின் கொள்கை. இலங்கை அந்நிய ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்று 45 வருடங்கள் கழிந்து விட்டன. இத்தனை காலமாக இலங்கை நாட்டின் தேசத் தலைவர்களாக இருந்தவர்கள் அனைவரும் இந்தக் கொள்கையை தலைமேற் கொண்டு நடைமுறைப்படுத்தியவர்களே.

எனினும் அவர்கள் எல்லோரிலும் ''முதலாம் பிள்ளை''யாகத் திகழ்பவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா. 12 வருடங்கள் தொடர்ச்சியாக நாட்டுத் தலைவராக இருந்த காலத்திலும் சரி, ஆட்சிக் கதிரையைப் பிடித்து விட வேண்டும் என்பதற்காக அரசியல் சூழ்ச்சிகளில் ஈடுபட்டு எதிரணியில் இருந்த காலத்திலும் சரி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டவொண்ணாமல் செய்தசெட்டிக்காரன் ஜே. ஆர்.

1957ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டதற்கு மூலகாரணர் ஜே. ஆரே. அவர் தலைமை வகித்துச் சென்ற கண்டி பாத யாத்திரையே 1958ஆம் ஆண்டில் நடைபெற்றகாட்டுமிராண்டித் தனமான இனக்குழப்பத்துக்கு வழி கோலியது.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. எட்டு வருடங்களில் —1956 இல்—எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதுவரை உள்ளே புகைத்துக் கொண்டிருந்த சிங்கள - தமிழர் குரோதம், பகைமை அவ்வேளை தீச்சுடராக வெளிக்கிளம்பி எரிந்தது.

எனினும் பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் அந்தத் தீயை அணைத்திருக்கலாம். அவ்வாறு தீயை அணைக்காமல் இப்போது அது கொழுந்து விட்டெரிவதற்கு வழி செய்தவர் ஜே. ஆரே. இது விடயத்தில் வேறெந்தச் சிங்களத் தலைவரையும் விட அவருக்கே அதிகபங்கு உண்டு.

வாக்குகளை மடியில் சட்ட மந்திரம்

1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைத் தனது மடியில் கட்டிக் கொள்வதற்காக தமிழர்களுக்குப் பிரச்சினைகள் உண்டு என்று ஒப்புக்கொண்டு மந்திரம் ஓதியவர் இவர். ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனைச் சேர்த்துக் கொண்டவர். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு எதனையுமே காணாமல் காலத்தை வாங்கி ஏமாற்றிவிட்டுப் ''போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்'' என்று

அரசியல்

முரசம் கொட்டி வீரம் பேசிய வரும் அவரே.

சிங்களவர் - தமிழர் உறவு விரிசலடைந்து அவர்கள் இருவரும் வெவ்வேறு அந்தலைகளில் உள்ள துருவங்கள் ஆகி விட்டனர். இதற்குப் பெரும் பங்களித்த ஜே. ஆர்., இப்போதைய ஜனாதிபதி போல இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என்று எப்படிக் கூற முடியும்? அதனால் தான் அவர் அதனையும் கூறி இனப் பிரச்சினையைத் தீர்க்காதிருப்பதனை நியாயப்படுத்தும் விதத்தில் பயங்கரவாதமும் உண்டு எனவும் சொல்லியுள்ளார்.

அவர் மட்டுமன்றி, சிங்கள அரசியல் தலைவர்கள் எல்லோரும், பௌத்த - சிங்களப் பேரினவாதமும் சேர்ந்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்குச் சூட்டியிருக்கும் பெயர் பயங்கரவாதம். ஆனால் தாம் கூறும் 'பயங்கரவாதம்' உருவாகி வித்திட்டவர்கள் அவர்களே என்பதனை கண்ணிருந்தும் குருடர்களாகப் பார்க்காதிருக்கிறார்கள்.

தமிழர்கள் தமது உரிமைகளை நட்புறவோடு கேட்ட போது, அமைதி வழியில் கேட்ட போது, சாத்வீகப் பண்டாரநாயக்காவும்தான்.

இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கின்றது என்று முழு உலகமுமே கூறுகின்ற போது, எமது ஜனாதிபதி மட்டும் இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது எனக் கூறிக்கொண்டிருக்கிறார். இதனால் மக்கள் ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள்— என்று திருவாய் மலர்ந்திருப்பவர் இரண்டு தடவை இலங்கைத் தீவின் அரசுத் தலைவராக — பிரதமராக — போதும் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை மனதில் வைத்தேயாகும்.

எதிர்வரும்ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகத் தாமே போட்டியிடப் போவதாக கொழும்புப் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் அம்மையார் தெரிவித்திருக்கிறார். 77 வயதான தாம், சுகதேகியாகவே இருப்பதாகவும், தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட இருப்பதாகவும், அதற்குத் தம்மால் இயலும் என்றும் கூறியிருக்கிறார். 'போலியோ' நோயினால் பாதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு, பிரசாரம் செய்து, வெல்ல முடிந்ததென்றால் தம்மால் ஏன் முடியாது என்று கேட்டிருக்கிறார்.

தொண்டமானின் வன்மம்

ஜனாதிபதி தேர்தலில் வெல்ல வேண்டுமானால் மலையக தமிழர்களின் வாக்கு அவசியம். இயலுமானால் வடக்கு - கிழக்குத் தமிழர்களின் வாக்குகளையும் மடியில் கட்ட முடிந்தால் வெற்றி நிச்சயம். இத்தகைய ஒரு கணக்கைப் போட்டுத் தான் சிறிமாவோ அமைச்சர் தொண்டமானைத் தனது பக்கம் சேர்த்துக் கொள்ள முயல்கிறார்.

கடந்த இருபத்தேழு வருடங்களாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒட்டி உறவாடிய தொண்டமான் இப்போது மனம் சலித்துப் போனார். ஐ. தே. கவின் முந்திய தலைவர்களான ஜே. ஆர்., பிரேமா போல இன்றைய டி. பியார் தனக்கு உரிய மதிப்பளிக்கவில்லை; தனது பலத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்று தொண்டாவின் மனம் புழுங்குகிறது. அதனால், தேர்தல் நெருங்குவதோடு அவருக்கு நல்ல பாடம் புகட்டவேண்டும் என்பதுதென்னிலங்கை அரசியலில் ''கிங்மேக்க''ராக விளங்கும் தொண்டாவின் வன்மம்.

ஜே. ஆரும், பிரேமாவும் மலையகத்துடன் பெரிதாகத் தொடர்பில்லாதவர்கள். டி. பி.யாரோ கண்டியச் சிங்களவர். எனவே மலையகத்தில் தொண்டமானின் வாலாட்டத்துக்கு இடம்கொடுக்கக் கூடாது என்று எண்ணுகிறார். அது மட்டுமல்ல. தொண்டாவைப் பகைத்துக் கொண்டால் சிங்களப் பேரினவாதிகளின் வாக்குகளைத் திரட்டலாம் என்பதும் அவரது நினைப்பு. வடக்கு-கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதமே என்ற பொய்க் கோஷம் போடுவதும், இராணுவத் தீர்வை நாடியிருப்பதும் பேரினவாதிகளின் வாக்குகளைத் தனது வங்கியில் கணக்கு வைப்பதற்கே.

ஆனால் டி. பி. போட்டிருக்கும் கணக்குத் தப்பானது என்பதனைப் பிரதமர் ரணில் உட்பட ஐ. தே. கவின் முந்த

டி.பியாரும் தடத்தை மாற்றி யுத்த நிறுத்தத்தை அறிவிப்பாரா?

போராட்டம் நடத்திக் கேட்ட போது சிங்களத் தலைவர்கள் வழங்கியிருந்தால் அவர்கள் கூறும் ''பயங்கரவாதம்'' — ஆயுதப் போராட்டம்— இங்கு வடிவம் கண்டிருக்க மாட்டாது

தமிழர்களின் நியாயமான உரிமைகளை - பிறப்பு உரிமைகளை - மனித வாழ்வுரிமைகளை - அவற்றில் சிலவற்றை வழங்குவதற்த ஆட்சியிலிருக்கும் அணியினர் முயன்ற போது, இலங்கை நாடே தமிழர்களுக்கு விற்கப்படுவதாகவும், சிங்களவர்களுக்கு அடிமைச் சாசனம் எழுதப்படுவதாகவும் அடுத்த அணியினர் - எதிரணியினர்— ஓலமிட்டதாலேயே இனப் பிரச்சினை தீரவில்லை; இப்போது தீர்க்க முடியாததாகி விட்டது.

தமிழர்கள் தமது உரிமைகளைக் கேட்டவுடன் ஆயுத பலம் கொண்டு அவர்களை அடக்குவதற்கு முனைந்தவர்கள் சிங்களவர்களே அதனாலேயே அவர்கள் பயங்கரவாதம் என்று நாமம் சூட்டும் ஆயுதப் போராட்டத்தில் தமிழர்கள் குதித்தனர்.

அம்மையாரின் புதிய ராகம்

இராணுவ பலம் கொண்டு தமிழர்களின், உரிமைப் போராட்டத்தை அடக்கிவிடலாம் என்று எண்ணி அதனைக் கட்டவிழ்த்து விட்டுத் தோற்றவர் ஜே. ஆர். மட்டுமல்லர். திருமதி சிறிமாவோ இருந்தும் இனப்பிரச்சினையை தீர்க்கும் திறமை இல்லாத திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குச் சாதகமாக இருந்த பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டவர்கள் — கைகழுவி விட்டவர்கள்— சிங்கள அரசுத் தலைவர்கள். அவர்களில் ஒருவர் சிறிமாவோ. அப்போதுதான், கும்பலில் கோவிந்தா என்று தவறுவிட்டிருந்தாலும் இனப் பிரச்சினையால் பெரிய யுத்தமே நடந்து, நாடு அழிந்து கொண்டிருக்கும் இப்போதாவது அவர் இதயசுத்தியுடன் செயற்படுகிறாரா? இல்லை.

தமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவரின் தலைமையில் பிரேமதாசா அரசாங்கம் அமைத்த நாடளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இனப் பிரச்சினைக்கான ஒரு தீர்வு ஆலோசனையை முன்வைக்க விரும்பாமல் ஆளுங் கட்சியுடன் கண்ணாமூச்சி விளையாடியவர் அம்மையார்.

இப்போது திடீரென ராகத்தை மாற்றிப் பாடுவது அடுத்த வருட வெசாக் பண்டிகைக்குப் பின்னர் எப்படியாவது சமாளித்து விடலாம் என்ற ஊகத்தை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டி உள்ளன.

தேர்தல் நடைபெற்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், இமாசல பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களிலும் கடைசியாக பாரதிய ஜனதாக்கட்சியின் ஆட்சியே இருந்தது.

1992 டிசம்பர் 6ஆம் திகதி உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்தி, பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவம்—

அதனை அடுத்து வட இந்திய மாநிலங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட இனமோதல்கள் — ஆகியவற்றைத் தொடர்ந்து இந்த நான்கு மாநிலங்களின் சட்டசபைகளையும் பிரதமர் நரசிம்மராவ் கலைத்திருந்தார். இதன்மூலம் பாரதீய ஜனதாவுடன் நேரடி மோதலுக்கும் தயாரானார்.

பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவமும் அதன்பின்னர் இடம் பெற்ற இந்து—முஸ்லிம் கலவரங்களும் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி இருந்தன. இந்தியாவின் மதச்சார்பற்ற கொள்கையையும் அது கேள்விக்குரியதாக்கி இருந்தது. இந்தக் கலவரங்களில் 2,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

முன்னைய ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த பாரதிய ஜனதாக் கட்சி, அயோத்திப் பிரச்சினைக்கு பின்னர் காங்கிரஸுக்கு ஒரு மாற்றுக் கட்சியாக தன்னை முழு அளவில் தயார்படுத்தி விட்டதாக நம்பப்பட்டது.

அத்துடன் பாபர் மசூதி தகர்ப்பு தனக்கு பெரும் வாக்குகளைச் சேகரித்துத் தரும் என்றும் பாரதீய ஜனதா நம்பி இருந்தது.

முன்னர் நடந்த சட்டசபைத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குகளை விட ஒரு வாக்குக் குறைந்தாலும் மசூதி உடைப்புக்கு எதிரான வாக்காகவே அது கருதப்படும் என பாரதீய ஜனதாத் தலைவர்கள் சமீபத்திய சட்டசபைத் தேர்தல்களின் போது பிரசாரம் செய்துவந்தனர்.

ஆனால் முஸ்லிம்களினதும், சிறுபான்மை யினரினதும்,

சஞ்சாரன்

தாழ்த்தப்பட்ட மக்களினதும் வாக்குகள் மட்டும் அல்ல, இந்துக்களின் வாக்குகளும் முழுமையாக இக்கட்சிக்குக் கிடைக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அடுத்த பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் என்ற ஒருவித பிரமையை ஏற்படுத்தி வந்த பாரதீய ஜனதாவுக்கு தேர்தல் முடிவுகள் பலமான ஓர் அடியாகவே கருதப்படுகிறது.

அதே சமயம் பம்பாய் பங்குச் சந்தை ஊழல் உட்பட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை இன்றும் எதிர்நோக்கி வரும் பிரதமர் நரசிம்மராவ் தனது தலைமையைத் தக்க வைத்திருப்பாரா என்பது தொடர்ந்து கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

தென்நாட்டுத் தலைமை

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக தென் இந்திய மாநிலம் ஒன்றைச் சேர்ந்த — அதாவது இந்தி பேசாத மாநிலம் ஒன்றைச் சேர்ந்தவர் நாட்டின் பிரதமராக இருக்கிறார்.

அதுவும் வாக்குகளைப் பெறும் வசீகரம் இல்லாதவர் என்று அவர் மீது கட்சிக்குள் குற்றச்சாட்டுக்களும் பரவலாக இருந்து வருகின்றன.

இந்தியாவின் பெரும்பான்மை இந்தி பேசும் மக்களின் வாக்குகள்— அதாவது வட இந்திய மாநிலங்களின் வாக்குகள் இந்திரா காங்கிரஸுக்குக் கிடைப்பதற்கு தென் நாட்டுத் தலைமையும் ஒரு தடங்கலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து காங்கிரஸுக்குச் சரியான தலைமை இல்லாத நிலையிலேயே நரசிம்மராவிடம் பிரதமர் பதவி சென்றடைந்தது.

ஏற்கனவே மூன்று நம்பிக்கை இல்லாத தீர்மானங்களில் இருந்து தப்பிப் பிழைத்த நரசிம்மராவுக்கு இனிமேல் நம்பிக்கை இல்லாத தீர்மானம் மூலம் கண்டம் வரமாட்டாது.

அர்ஜுன் சிங் உருவிலோ அல்லது சரத்பவார் உருவிலோ அல்லது திவாரி உருவிலோ தான் கண்டம் வரப் போகிறது.

சமீபத்திய சட்ட சபைத் தேர்தலில் மத்திய பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் பெற்ற வெற்றிக்கு அர்ஜுன்சிங்கின் செல்வாக்கே பிரதான காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

அர்ஜுன் சிங்கின் அரசியல் வளர்ச்சியும் செல்வாக்கும் நரசிம்மராவுக்கு பெரும் அச்சுறுத்தலாகத்தான் இருக்கப் போகிறது.

★

உதயகாந்தன்

அமைச்சர்கள் சிலர் புரிந்து கொண்டுள்ளார்கள். வெற்றிக்கான வாக்குகளைப் பெறுத்தளவில் தொண்டமான் ஒரு பொன்வாத்து.

வடக்கு-கிழக்கில் இராணுவத் தீர்வு என்ற முடிவை எடுத்த பின்னர் அங்கு வாழும் மக்களின் வாக்குகளைப் பெறமுடியாத நிலை. தென்னிலங்கை வாழ் தமிழர்களுக்கு கடந்த மூன்று வருடங்களாகக் கொடுக்கப்படும் தொந்தரவுகளினால் அவர்களும் இம்முறை தமது வாக்குகளை அடுத்த அணிக்கே மாற்றும் சாத்தியம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

பாரதீய ஜனதாவுக்கு ஏற்பட்ட தோல்வி
இந்து தீவிரவாதத்துக்கு பலமான அடி

வட இந்திய மாநிலங்களான மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகியவற்றுக்கும் யூனியன் பிரதேசமாக இருந்து புதிதாக சட்டசபை அந்தஸ்து பெற்றதில்லிக்கும் நடைபெற்ற சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளிவந்து விட்டன.

தேர்தல் முடிவுகளின் படி மத்திய பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மை பெற்று தனித்து ஆட்சி அமைக்கும் பலத்தை பெற்றுள்ளது.

இந்தியாவிலேயே அதிக சனத்தொகை உள்ள மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்துவிட்டது. எதிர்பார்க்கப்பட்டது போன்று இந்து மத தீவிரவாதக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியினால் கூட இங்கு அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. பிராந்தியக் கட்சிகளான பகுஜன் சமாஜ் — சமாஜ்வாதி ஜனதா கூட்டணி இங்கு ஆட்சி அமைக்கும் பலத்தைப் பெற்றுள்ளது. மற்றும் இமாசலப் பிரதேசத்தில் இந்திரா காங்கிரஸ் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுள்ளது.

ராஜஸ்தானில் பாரதீய ஜனதாக்கட்சி மற்றும் ஒரு சில சுயேச்சை உறுப்பினர்களின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் நிலையில் இருந்து வருகிறது.

'குட்டி இந்தியா' என்று பாரதீய ஜனதாக் கட்சியினால் வர்ணிக்கப்படும் டில்லி சட்டசபை பாரதீய ஜனதா விடமே சென்றடைந்துள்ளது. பாரதீய ஜனதா இங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

மொத்தத்தில் ஐந்து சட்டசபைகளுக்கும் நடந்து முடிந்த தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் இரு சட்டசபைகளையும் பாரதீய ஜனதாக் கட்சி இரு சட்டசபைகளையும் கைப்பற்றி உள்ளன. ஒரு ஜனதாவுக்கே பெரும்தோல்வி எனலாம்.

அதேசமயம் இந்திரா காங்கிரஸுக்குள் இருந்து வரும் நரசிம்மராவ் எதிர்ப்பாளர்களுக்கும் இது தோல்வியே

தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வி அடைந்தால் அதற்கான மூன்று ஆண்டுகளையும் எப்படியாவது சமாளித்து விடலாம் என்ற ஊகத்தை தேர்தல் முடிவுகள் வெளிக்காட்டி உள்ளன.

தேர்தல் நடைபெற்ற மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரபிரதேசம், இமாசல பிரதேசம் ஆகிய நான்கு

பல பின்னடைவுகளுக்கு மத்தியில் காங்கிரஸுக்கு கணிசமான ஆதரவு

சட்டசபை பிராந்தியக்கட்சிகளின் கூட்டணியிடம் சென்றடைந்துள்ளது.

அயோத்தியையே கோட்டை விட்ட பாரதீய ஜனதா

தேர்தல்கள் நடைபெறுவதற்கு முன் பாரதீய ஜனதாக்கட்சி வெற்றி பெறலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

1992 டிசம்பர் அயோத்தி பாபர் மசூதி தகர்ப்பின் பின்னர் பாரதீய ஜனதா, தீவிரவாத இந்துக்களின் 'ஹீரோ' வாக கருதப்பட்டு வந்தது.

ஆனால் பாபர் மசூதி இருந்த அயோத்தித் தொகுதியிலேயே பாரதீய ஜனதா கோட்டைவிட்டு விட்டது. உத்தர பிரதேச மாநிலத் தோல்வி பாரதீய ஜனதாவுக்கு பெரும் ஏமாற்றம் மட்டும் அல்ல, அதன் எதிர்கால அரசியலுக்கும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

நரசிம்மராவ் எதிர்ப்பாளருக்கும் தோல்வி

மொத்தத்தில் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸை விட பாரதீய ஜனதாவுக்கு பெரும்தோல்வி

வெளி உலகில்

கையோடு, உத்தர பிரதேசத் தோல்விக்குப் பொறுப்பேற்று காங்கிரஸ் தலைவர்கள் கூண்டோடு பதவி விலக வேண்டும் என்று குமாரமங்கலம் கருத்து வெளியிட்டிருந்தார். பிரதமர் நரசிம்மராவின் பணிப்பின் பேரில் தற்போது இவரது ராஜினாமா இடம்பெற்றுள்ளது.

எஞ்சியமூன்று வருடத்தை ராவ் சமாளிப்பாரா?

பதவிக்கு வந்து சுமார் இரண்டு ஆண்டுகளை கடந்துள்ள நரசிம்மராவ் அரசு எஞ்சிய முழுப் பொறுப்பையும் நரசிம்மராவ் மீது போடவும்—

இதனைச் சாட்டாக வைத்து நரசிம்மராவின் தலைமைக்கு வேட்டுவைக்கவும் இவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

உத்தர பிரதேச படுதோல்வியை அடுத்து மத்திய துணை அமைச்சர், ரங்கராஜன் குமாரமங்கலம் நரசிம்மராவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியதும் இத்தகைய தொன்றே.

காங்கிரஸ் தோற்ற

மாநிலங்களிலும் கடைசியாக பாரதீய ஜனதாக்கட்சியின் ஆட்சியே இருந்தது.

1992 டிசம்பர் 6ஆம் திகதி உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள அயோத்தி, பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவம்—

அதனை அடுத்து வட இந்திய மாநிலங்களில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட இனமோதல்கள் — ஆகியவற்றைத் தொடர்ந்து இந்த நான்கு மாநிலங்களின் சட்டசபைகளையும் பிரதமர் நரசிம்மராவ் கலைத்திருந்தார். இதன்மூலம் பாரதீய ஜனதாவுடன் நேரடி மோதலுக்கும் தயாரானார்.

பாபர் மசூதி தகர்ப்புச் சம்பவமும் அதன்பின்னர் இடம் பெற்ற இந்து—முஸ்லிம் கலவரங்களும் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி இருந்தன. இந்தியாவின் மதச்சார்பற்ற கொள்கையையும் அது கேள்விக்குரியதாக்கி இருந்தது. இந்தக் கலவரங்களில் 2,000க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

முன்னைய ஒவ்வொரு நாடாளுமன்றத் தேர்தலிலும் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்த பாரதீய ஜனதாக் கட்சி, அயோத்திப் பிரச்சினைக்கு பின்னர் காங்கிரஸுக்கு ஒரு மாற்றுக் கட்சியாக தன்னை முழு அளவில் தயார்படுத்தி விட்டதாக நம்பப்பட்டது.

அத்துடன் பாபர் மசூதி தகர்ப்பு தனக்கு பெரும் வாக்குகளைச் சேகரித்துத் தரும் என்றும் பாரதீய ஜனதா நம்பி இருந்தது.

முன்னர் நடந்த சட்டசபைத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குகளை விட ஒரு வாக்குக் குறைந்தாலும் மசூதி உடைப்புக்கு எதிரான வாக்காகவே அது கருதப்படும் என பாரதீய ஜனதாத் தலைவர்கள் சமீபத்திய சட்டசபைத் தேர்தல்களின் போது பிரசாரம் செய்துவந்தனர்.

ஆனால் முஸ்லிம்களினதும், சிறுபான்மை யினரினதும்,

தாழ்த்தப்பட்ட மக்களினதும் வாக்குகள் மட்டும் அல்ல, இந்துக்களின் வாக்குகளும் முழுமையாக இக்கட்சிக்குக் கிடைக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அடுத்த பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றும் என்ற ஒருவித பிரமையை ஏற்படுத்தி வந்த பாரதீய ஜனதாவுக்கு தேர்தல் முடிவுகள் பலமான ஓர் அடியாகவே கருதப்படுகிறது.

அதே சமயம் பம்பாய் பங்குச் சந்தை ஊழல் உட்பட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்களை இன்றும் எதிர்நோக்கி வரும் பிரதமர் நரசிம்மராவ் தனது தலைமையைத் தக்க வைத்திருப்பாரா என்பது தொடர்ந்து கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது.

தென்நாட்டுத் தலைமை

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக தென் இந்திய மாநிலம் ஒன்றைச் சேர்ந்த — அதாவது இந்தி பேசாத மாநிலம் ஒன்றைச் சேர்ந்தவர் நாட்டின் பிரதமராக இருக்கிறார்.

அதுவும் வாக்குகளைப் பெறும் வசீகரம் இல்லாதவர் என்று அவர் மீது கட்சிக்குள் குற்றச்சாட்டுக்களும் பரவலாக இருந்து வருகின்றன.

இந்தியாவின் பெரும்பான்மை இந்தி பேசும் மக்களின் வாக்குகள்— அதாவது வட இந்திய மாநிலங்களின் வாக்குகள் இந்திரா காங்கிரஸுக்குக் கிடைப்பதற்கு தென் நாட்டுத் தலைமையும் ஒரு தடங்கலாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து காங்கிரஸுக்குச் சரியான தலைமை இல்லாத நிலையிலேயே நரசிம்மராவிடம் பிரதமர் பதவி சென்றடைந்தது.

ஏற்கனவே மூன்று நம்பிக்கை இல்லாத தீர்மானங்களில் இருந்து தப்பிப் பிழைத்த நரசிம்மராவுக்கு இனிமேல் நம்பிக்கை இல்லாத தீர்மானம் மூலம் கண்டம் வரமாட்டாது.

அர்ஜுன் சிங் உருவிலோ அல்லது சரத்பவார் உருவிலோ அல்லது திவாரி உருவிலோ தான் கண்டம் வரப் போகிறது.

சமீபத்திய சட்ட சபைத் தேர்தலில் மத்திய பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் பெற்

தொழில்நுட்பக் கல்லூரி இறுதி பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா புதிய, பழைய பாடத் திட்டத்துக்கான பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திப் போடப்பட்டிருப்பதாகவும் —

அந்தப் பரீட்சையை அடுத்த ஆண்டு முற் பகுதியில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் பரீட்சைத் திணைக்களப் பிரதி ஆணையாளர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபருக்கு அறிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம், 23 ஆம் திகதிகளில் நடைபெற வேண்டிய மேற்படி பரீட்சை வினாத்தாள் இங்கு வராததால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை.

பரீட்சை இங்கு நடைபெறாததால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பரீட்சையை மீண்டும் நடத்தக் கோரி மகஜர் ஒன்றை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பருத்தித்துறையில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறையையும், இழுவைப் படகுகளையும் திருத்தும் வேலைகளை உடனடியாக ஆரம்பித்து கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. (இ-109-173)

வவுனி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

வவுனிக்குளம், பிரேமசேன ஆறு என்பன உடைப்பெடுக்கும் ஆபத்து ஏற்படிருப்பதால் அதனைத் தடுக்கும் நோக்கில் மண் அணை அமைக்கும் முயற்சியில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

சார்க் மாநாடு

டாக்கா, டிச. 5

சார்க் வெளிநாட்டமைச்சர்கள் மாநாடு நேற்று சனிக்கிழமை பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் ஆரம்பமாகியது. (க)

சமூக சேவையாளர் காலமானார்

யாழ்ப்பாணம், டிச. 5

பிரபல சமூக சேவையாளரும், யாழ். மாவட்ட லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும், லியோக்களின் மாவட்டத் தலைவருமான லயன் எல். றேமன் முத்தையா நேற்று முன் தினம் மாரடைப்பால் காலமானார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமுன்னாள் தலைவர், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு உதவித் திட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்புச் செயற்குழுவின் தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் – 83, வை. எம். சி. ஏ. ஆகியவற்றின் அங்கத்தவர், பதவிகளை வகித்த இவர் நீண்ட காலமாகச் சமூக சேவையில் ஈடுபட்டிருந்தார்

நீர்ப்பாசனப் பொறியியலாளராகப் பணிபுரிந்த இவர் ஆனையிறவு கடல் நீரேரித் திட்டத்தில் பங்காற்றியவராவார். (அ-த-5)

இனந்தெரியாத நபரின் சடலம்

யாழ்ப்பாணம், டிச. 5

ஆவரங்கால் பிரதான வீதியில் கிடந்த இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை 1-00 மணி அளவில் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது

சடலத்தின் அருகில் சைக்கிள் ஒன்றும் கிடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

சடலம் இனம் காண்பதற்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (க-15)

அடையாள அட்டைகளை இன்று பெறலாம்

யாழ்ப்பாணம், டிச. 5

தபால் அஞ்சல் அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் இன்று முற்பகல் 9.00 மணி முதல் 11.00 மணிவரை யாழ். பிரதம தபாலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

இராணுவத்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களில் ஒருவர் என்ற இழிபெயர் கொண்டவர் வைத்தியரத்தினா.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் படைகள் மகா மோசமான மட்டையடி வாங்கிய சம்பவங்கள் அவரது தலைமைக் காலத்தில் நடந்துள்ளன. அவ்வாறான வற்றில் பூநகரிப் படைத் தளத்தைப் புலிகள் தாக்கி அழித்த சம்பவமே மிகவும் மோசமானது எனலாம். இந்தச் சம்பவத்தில் நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

தென்பகுதியில் உள்ள பெரும்பான்மை சிங்களவர்கள் இது பற்றி அறிந்து கோபமும், அதிர்ச்சியும் அடைந்தனர். அப்பொழுதே தெரிந்து விட்டது இந்தத் தளபதி போக வேண்டியவர் தான் என்று.

ஆனால் இவர் போய்விடுவதால் மட்டும் பெரிதாக மாற்றம் எதுவும் நேர்ந்து விடப் போவதில்லை. மிகுந்த உணர்ச்சியுடன் உந்தப்பட்டு உறுதியுடன் போராடும் விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்கா இராணுவம் எதிர் கொள்ள வேண்டிய நிலை அங்கு உள்ளது. அந்தநிலை மாறாத வரையில் தளபதி ஒருவர் மாறிவிட்டதால் மட்டும்என்ன பெரிதாக சாதித்து விடப் போகிறார்கள்? — என்பதாகும். (அ-5)

நாடாளுமன்றத்தி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் திரு. வாசுதேவ நாணயக்காரா எடுத்த வியாழனன்று கேள்வி எழுப்பினார். அந்தக் கேள்விக்கு நாடாளுமன்ற விவகார சுற்றுச் சூழல் அமைச்சர் விமல் விக்கிரமசிங்க அளித்த பதிலுக்கும், அந்த விடயம் பற்றி பொலீஸ் மா அதிபர் அலுவலகம் விடுத்த அறிக்கைக்கும் இடையே பெரும் வேறுபாடுகள் காணப்பட்டன.

பிரித்தானியா போன்ற மேற்குலக நாடுகளில் தவறான தகவல்களை நாடாளுமன்றத்தில் வெளியிட்ட அமைச்சர்கள், உறுப்பினர்கள் பலர் பின்னர் தார்மீகப் பொறுப்பேற்றுப் பதவி விலகியுள்ளனர். — இவ்வாறு அந்த சிங்களப் பத்திரிகையாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

தொண்டமானுடன்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் திரு. தொண்டமான், திரு. காமினி திசாநாயக்காவுடனும், திருமதி சந்திரிகா குமாரரணதுங்காவுடனும் வெவ்வேறாக கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

திரு. தொண்டமான் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்து மூன்றாவது ஒரு அணியை உருவாக்கவுள்ளார் என பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த போதிலும் தான் ஐ. தே. கட்சி அல்லது ஸ்ரீ.ல.சு.கட்சி தவிர்ந்த வேறு எந்த ஒரு கட்சியுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளக் கூடிய முட்டாள் அல்ல எனசென்னை புறப்படும் முன்னர் தமது நெருங்கிய நண்பர்களிடம் தெரிவித்ததாகத் தெரிகிறது.

திரு. தொண்டமான் உண்மையில் என்ன தீர்மானத்தை எடுக்கவுள்ளார் என்பது குறித்து தெளிவில்லை.

கடந்த மாகாண சபைத் தேர்தல் பிரச்சாரங்களின் போது திரு. தொண்டமான் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த முக்கியமானவர்களை மேடைகளில் விமர்சித்த போதிலும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பற்றி கருத்தெதுவும் தெரிவிக்கவில்லை என ஐ. தே. க. வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகிறது.

இப்படி ராவய ஆசிரியர் தெரிவித்தார். (இ-6)

ஆறுமுகநாவலர் குருபூசை பல இடங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், டிச. 5

தமிழ்க் கலாசார மறுமலர்ச்சியின் தந்தையும் ஐந்தாம் சமய குரவராகக் கருதப்படுபவருமான நல்லை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை தினம் இன்றாகும்.

குருபூசைத் தினவிழா குடாநாட்டின் பல பகுதிகளிலும் கொண்டாடப் படுகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இன்று ஞாயிறு காலை 8 மணிக்கு விஷேட பூசையும், பிற்பகல் 2.30 மணி தொடக்கம் கைலாசபதி கலையரங்கில் சொற்பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (த-68)

★ ★ ★

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள நாவலர் குருபூசை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். வாசிக கலாநிதி கனகசபாபதி ''சைவம் வளர்த்த நாவலர்'' என்ற பொருளில் சொற்பொழிவாற்றுவார்.

★ ★ ★

உரும்பராய் கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் நாவலர் குருபூசையில் 'நாவலர் பாரம்பரியமும் இன்றைய நிலைப்பாடும்' என்ற பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் விஷேட சொற்பொழிவாற்றுவார். (த)

★ ★ ★

யாழ்.சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படும் நாவலர் குருபூசை இன்று காலை 8.30 மணிமுதல் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் சிறப்புரையாற்றுவர். நாவலர் பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (த-30-3)

பிரேமதாச குறித்து கேவலமாக பேசினாராம்

அமைச்சர் மீது நடவடிக்கை

கொழும்பு, டிச. 5

மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவை இழிவுபடுத்திப் பேசியதாக தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா மீது ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடம் குற்றஞ்சாட்டியுள்ளது.

திரு. ரணசிங்கா தற்சமயம் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

அவர் கொழும்பு திரும்பியதும், குற்றப்பத்திரிகை அவரிடம் கையளிக்கப்படும் என்று ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவின் முடிவிற்கு இணங்க — திரு. ரணசிங்கா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை விசாரிக்க கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேனகுரே ஒழுக்காற்று விசாரணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

அமைச்சர்கள் நந்தா மத்திபு, ரேணுகா ஹேரத். ராஜாங்க அமைச்சர் எம். டி. ஏ. குணதிலக ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றுள்ளார்கள். (இ-எ)

மரண அறிவித்தல்கள்

லயன். L. றேமன் முத்தையா

கரம்பனூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் 67/1 கோவில் வீதியில் வசித்தவரும் இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளரும் பல பொது நல சேவை அமைப்புக்களுடன் இணைந்து இறுதிவரை பணியாற்றி வந்தவருமாகிய லயன் L. றேமன் முத்தையா அவர்கள் 3-12 93 இல் காலமானார்.

அன்னார் நவமணியின் அன்புக் கணவரும் குமார், காந்தி, டாக்டர் கமால், குமுதினி, டாக்டர் கிருஷ்ணி ஆகியோரின் அன்புத் தந்தையும் வத்சலாகுமார், மகேந்திரன் மனுவேற்பிள்ளை, டாக்டர் தர்ஷினி கமால், மாக்கஸ் மரியநாயகம், டாக்டர் சிறிபதி அழககோன் ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும், ஷிரேவான். ஷெறீன், அனுஷா, கிறிஸ்ரீன், கிருஷாந்தன், ஆத்திக்கா ஆகியோரின் நேசம் நிறைந்த பேரனும், L E முத்தையா (விஜயா) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (5-12-93) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் ஆரம்பமாகி புனித யுவானியார் ஆலயத்தில் 10.00மணிக்கு திருப்பலியின் பின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்
நவமணி முத்தையா
(மனைவி)

67/1, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (28297)

நாகலிங்கம் கனகரத்தினம்

கைதடியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் கனகரத்தினம் 04 – 12 – 1993 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நாகலிங்கம் தம்பதிகளின் புதல்வனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், தவமணிதேவி, தவராணி, தவநாதன் (கருணாநிதி அன் கோ. கண்டி), காலஞ்சென்ற தவரஞ்சினி மற்றும் தவநங்கை, தவவிங்கம் (அத்தியட்சகர் நில அளவைத் திணைக்களம், தியத்தலாவை), தவகுமாரன் (கனடா), தவகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பையா (ஓய்வுபெற்ற ஆசிரியரும், சமாதான நீதிவானும்), காலஞ்சென்ற கணேசலிங்கம், மற்றும் கனகமணி, கமலநாதன் (மக்கள் வங்கி – சாவகச்சேரி), சிவநேசன் (மீன்பிடித் திணைக்களம் திருகோணமலை), நந்தினி, கௌசலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, மற்றும் பொன்னுத்துரை (ஆஸ்ரேலியா), தையல்முத்து, நீலாட்சிப்பிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாமோதரம்பிள்ளை, பவளம், காலஞ்சென்றவர்களான சின்னையா, மயில்வாகனம், செல்வம்மா, சதாசிவம் ஆகியோரின் மைத்துனரும், சுகந்தினி (நூலகர் சாவகச்சேரி பொது நூலகம்), சுவேந்திரன் (லண்டன்), Dr மீனலோஜினி, ஜெயந்திரன் (யப்பான்), துஷ்யந்தி, கஜேந்திரன், சிறிராம், கஜமுகன், சதாசிவன், காண்டீபன், பார்த்தீபன், ஹரிபவன், அனுசரன், வைதேகி, வைஷ்ணவி, சங்கீரணி, சரண்யா, சாருகேசி, அஜனி ஆகியோரின் அன்புப் பேரனும், நிராதன், நேத்திரன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் இன்று (05-12-1993) ஞாயிறுக்கிழமை கைதடி கனகபவனத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பொ. சுப்பையா
(மருமகன்)

கைதடி,
(28298)

திருபதி யோகரஞ்சினி புவிராஜசிங்கம்

(முலலைத்தீவு பிரபாகர் பார்மசி உரிமையாளர்)

திருமதி யோகரஞ்சினி புவிராஜசிங்கம் காலமானார்.

இவர் சென்ஜோண் புவிராஜசிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்) அவரின் அன்பு மனைவியும் சுதாகர், பிரபாகர் (சம்பத்திரியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), நிருபாகர் (புனித கென்றி அரசர் கல்லூரி, இளவாலை) ஆகியோரின் அன்புத் தாயாகும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5-12-93) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல. 55 சிவப்பிரகாசம் வீதி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் முகவரியில் உள்ளஇல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சென்யோண் புவிராஜசிங்கம்
(கணவர்)

55. சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (28300)

தேர்தலில் வாக்குத்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரிதும் உண்டு.

சிங்களவர் வாக்கும் சந்தேகம்

இவை எல்லாவற்றையும் விட வடக்கு-கிழக்கில அரசு அடுத்தடுத்துச் சந்தித்துவரும் பெரும் இராணுவத் தோல்விகளால் சிங்கள மக்களின், மிகக் குறிப்பாக படைகளில் சிப்பாய்களாக இருந்து மாண்ட கிராமப்புறச் சிங்கள இளைஞர்களின் பிரதேசங்களில் ஐ. தே கவுக்கு வாக்குகள் கிடைக்காது என அஞ்சப்படுகிறது.

அதனால் பொன்முட்டை இடும் தொண்டாவுடன்—அவரது காங்கிரஸுடன் — உள்ள உறவை முறிப்பது ஐ. தே. கவின் அரசியல் தற்கொலையாகும் என்று அந்த அமைச்சர்கள் கருதுகிறார்கள். அதனால் எப்படியும் தொண்டாவை தொடர்ந்தும் அரவணைக்கத் தூண்டுகிறார்கள்.

அதன் பொருட்டு டி. பியையும் அவரையும் நேருக்கு நேர் பேச வைத்தார்கள். அமைச்சரவையில் பேசினார்கள். எனினும் தோட்டத் தொழில் சம்பந்தமாக அரச சார்பில் கொடுக்கப்பட்ட திட்டம் ஒன்றை நிராகரித்து தொண்டமான் தனது மிடுக்கை நிலைநிறுத்தியிருக்கிறார்.

இதேவேளையில் தினேஷ் குணவர்த்தனாவைத் தலைவராகக் கொண்ட புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைப்பதில் ஒரு சில சாரார் ஈடுபட்டு வருவதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவும் ஒரு சிங்களத் தீவிரவாத அணியாக முளைக்கும் சாத்தியம் உண்டு.

அப்படி ஓர் அணி தோன்றினால் டி. பியார் கணக்கு வைத்திருக்கும் சிங்களத் தீவிரவாதிகளின் வாக்குகளும் பிளவுண்டு போகும். தொண்டமானை அலட்சியப் படுத்துவது என்ற எண்ணத்தையும் அவர் வலுப்படுத்தினால் பின்னர் வடக்கு-கிழக்கு வாழ் தமிழர்களின் வாக்குகளின் மேல் அவர் கண் வைக்கும் தேவை உண்டாகும்.

அரசியலுக்கும், அரசியல் பதவிக்கும், நிரந்தரமான கொள்கை நிலைப்பாடு எங்கே உண்டு? சந்தர்ப்பவாதமே இப்போதைய அரசியல் ''பண்பாகி'' விட்டது! அரசியல் என்ற சூதாட்டத்தில் நிரந்தர நண்பர்களும் இல்லை. நிரந்தர எதிரிகளும் இல்லை.

அதனால் —

''வடக்கு – கிழக்கில் இனப் பிரச்சினை என்று ஒன்றில்லை'' என்று தான் கூறி வருவதை விஜேதுங்கா, திடீரென முற்றாகத் தனது வயிற்றுகுள்ளே விழுங்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அதனைத் தொடர்ந்து முதலில் யுத்தத்தை நிறுத்தவும் யோசிக்கலாம். பூநகரித் தோல்வியைச் சிங்கள் மக்கள் மறந்து போவதற்கு யுத்த நிறுத்தம் உதவும் அல்லவா? ஒரு சிலர் கொக்கரிப்பார்கள், அவ்வளவு தான். பின்னர் மறந்து போவார்கள். எல்லாம் சரியாகிவிடும் என்ற வாய்ப்பாட்டை நினைவுபடுத்தும் வேலைகள் ஐ. தே. கட்சிக்குள் நடப்பதாகவும் தகவல் உண்டு.

கொழும்பில் இயங்கும் தமிழ்க் குழுக்களை ராஜாங்க அமைச்சர் ராஜமனோகரி புலேந்திரன் சாடி இருப்பது வடக்கு - கிழக்கு வாக்குகளில் டி. பி. யார் நாட்டம் செலுத்தக்கூடும் என்பதற்கான சமிக்ஞை என்று கொள்ளலாமா?

கடந்த 1990 டிசம்பர் 31 இல் இருந்து யுத்த நிறுத்தத்துக்குத் தடைக்கல்லாக இருப்பது அரசாங்கமே. இந்த ஆண்டின் டிசம்பர்மாதமும் பிறந்து விட்டது.

மாரி காலம் முடிந்த பின்னரும் குடாநாட்டின் மீது பாரிய இராணுவத் தாக்குதல் ஒன்றைப் புதிதாக நடத்த முடியுமா என்றது இராணுவத் தரப்பிலேயே கேள்விக் குறியாக நிற்கிறது.

ஆகையால் யுத்த நிறுத்தம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தால் அதனையும் மறைத்துக் கொள்ளலாம் என்ற புதிய சிந்தனை ஆளும் தரப்பாரின் சில வட்டாரங்களில் இலேசாக உதித்திருப்பதாக அறிய முடிகிறது.

தேர்தலில் வாக்குத் தேடும் வாய்ப்பாடுகளும், கணக்குகளும் போடப்படும் இந்த வேளையில், யுத்த நிறுத்தம் குறித்து அரசு தரப்பில் நினைக்கப்படுவது நிலைமைகளை மாற்றலாம். வடக்கு-கிழக்கு விவகாரத்தில் தமது நடத்தை மாற்றி யுத்த நிறுத்தம் பற்றி அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

★

நேற்றைய..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்ததால் அவற்றில் படுத்திருந்த சிலர் காயமுற்றனர்.

★ நல்லூர் அரசடியில் கடுங்காற்றினால் அதிர்ந்து விழுந்த வீட்டுச் சுவரின் இடிபாடுகளுக்குள் அகப்பட்டு சிவபாதம் பிரசாத் என்ற 15 வயது இளைஞன் காயமுற்றார். இவர் அரியாலையைச் சேர்ந்தவர். நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கிய போதே இச் சம்பவம் இடம் பெற்றது.

★ வல்வை ஊறணிப் பகுதியில் செ. உத்தமசீலன் என்பவரது வீட்டின் பாதுகாப்பு மதிலை உடைத்து உட்புகுந்த கடல் வெள்ளம் வீட்டில் இருந்த சில உடைமைகளையும் அள்ளிச் சென்றது.

★ கொழும்புத்துறையில் நெடுங்குளம், மணிப்புரி, வசந்தபுரம் பகுதிகளில் மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

★ குடத்தனை பொற்பதி கிராமத்தில் 25 குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் அவர்கள் இடம்பெயர்ந்தனர் இவர்கள் மயிலிட்டியிலிருந்து வந்தவர்கள் ஆவார்.

★ அச்சுவேலி, நீர்வேலி, அச்செழு, புன்னாலைக்கட்டுவன், சிறுப்பிட்டி, ஆவரங்கால் பகுதிகளில் இருந்த வாழைத் தோட்டங்கள் அனேகமாக முற்றாக நாசமாகி உள்ளன.

★ குடாநாட்டில் ஏனைய பகுதிகளிலும் வாழைகள் மற்றும் மா, முருங்கை, புளி, தென்னை போன்ற பலன்தரு வான் பயிர்கள் முறிந்து விழுந்ததால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது.

★ சுழிபுரம், வழக்கம்பரை அம்மன் கோவிலடியில் வீதியோரமாக நின்ற 50 வயதான ஆலமரம் வேருடன் சரிந்து விழுந்து விட்டது. உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நின்ற 80 வயதான புளிய மரமும் வேரோடு சாய்ந்து விட்டது.

★ மருதனார்மடம் பகுதியில் மரவள்ளி, புடோல், பயிற்றங்காய் தோட்டங்கள் நாசமடைந்து விட்

(அ-15-162-17-155-173-28-51-30-152-11-143-161-13)

கண்ணீர் அஞ்சலி

லயன் எல். றேமன் முத்தையா

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர், முன்னாள் யாழ். லயன்ஸ் கழகத் தலைவர், லியோக்களின் தற்போதைய மாவட்டத் தலைவர்)

எமது கழகத்தின் நீண்டகால உறுப்பினராகவும், அதன் தலைவராகவும், இயக்குநராகவும், ஆலோசகராகவும், லியோக்களின் மாவட்டத் தலைவராகவும் தொண்டாற்றிய

லயன் எல். றேமன் முத்தையா அவர்கள்

இறைபதம் அடைந்துவிட்டார். ''முத்த உறுப்பினர்'' என அன்போடு அழைக்கப்பட்ட லயன் முத்தையா அவர்கள், முத்தான ஐயாவாக முழு நிறைவாய் ஒளிர்ந்திருந்தார் எம் மகத்தில்.

இக்காலத்தில் அன்னாரின் இழப்பு இழக்க முடியாப் பேரிழப்பே. அவரின் துணைவியார், குழந்தைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினை அறியத் தருவதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

LIONS CLUB OF JAFFNA

யாழ். லயன்ஸ் கழகம்

[சி-6664]

கண்ணீர் அஞ்சலி

லயன் எல். றேமன் முத்தையா

(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர், முன்னாள் யாழ். லயன்ஸ் கழகத் தலைவர், லியோக்களின் தற்போதைய மாவட்டத் தலைவர்)

யாழ். லயன்ஸ் கழக முன்னாள் தலைவராகவும், அதன் இயக்குநராகவும், மாவட்ட ஆலோசகராகவும், லியோக்களின் யாழ். மாவட்டத் தலைவராகவும் தொண்டாற்றியா

லயன் எல். றேமன் முத்தையா

அவர்கள் எம்மை விட்டு மீளாத்தயில் எய்திய செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். இன்றைய சூழலில் அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் லயன்ஸ் கழக லியோக்கழக அங்கத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாவட்ட லயன்ஸ் கழகங்கள்,
மாவட்ட லியோக் கழகங்கள்.

குறிப்பு:- அன்னாருக்கு தமது இறுதி மரியாதையைச் செலுத்தும் முகமாக சகல லயன்ஸ் கழகத்தினரையும் லியோக் கழகத்தினரையும் அவரது இல்லத்தின் அருகிலுள்ள 67/3 இலக்க இல்லத்தில் இன்று (05—12—1993) காலை 8-00 மணிக்கு சமுகமளிக்க வேண்டுகிறேன்.

லயன் சு. இராமகிருஷ்ணன்
பிராந்தியத் தலைவர்

(சி/6647)

அன்னிய உணவை மறப்போம்- நம் மண்ணிலே பயிரை வளர்ப்போம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 05-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org